குடி அரசு பதிப்பக வெளியீடு— 9

# சீர்திருத்தம்

---

தென் இந்திய

## சீர்திருத்தக்காரர்கள்

## மகாநாட்டின்

தலைவர் திருவாளர்

ஈ. வெ. இராமசாமி

அவர்கள்

நிகழ்த்திய

தலைமைப்பேருரையும்

முடிவுரையும்.

---

(1928-ஹு நவம்பர் மீ 26, 27உ)

விலை அணா 2

செண்ட்ரல் பிரஸ், ஈரோடு

## தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாட்டில்
## தலைமை வகித்த
## திரு. ஈ. வெ. ராமசாமி பெரியார்
## நிகழ்த்திய முகவுரை பிரசங்கம்.

---

**26—11—28**

---

சகோதரிகளே! சகோதரர்களே!

இந்தப் பெரியதும் முக்கியமானதுமான மகாநாட்டிற்கு என்னை தலைவனாக தெரிந்தெடுத்ததன் மூலம் தாங்கள் எனக்களித்த கௌரவத்திற்காக எனது மனமார்ந்த நன்றி அறிதலை தங்கள் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இம்மகாநாடு, சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு என்று சொல்லப்படுகிறது. எனவே இத்தகைய ஒரு மகாநாட்டுக்கு சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரை தலைவராக தெரிந்தெடுத்திருந்திருப்பீர்களானால் அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்கும் என்று நான் சொல்வதற்காக என்னை மன்னிக்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்; ஏனெனில் வரவர எனக்கு சீர்திருத்தம் என்பதில் உள்ள நம்பிக்கை மறைந்துகொண்டேபோகின்றது. அன்றியும் நமது நாட்டை முன்னுக்குக் கொண்வரவேண்டும் என்பவர்களுக்கும், நமது நாட்டுப் பெரும்பான்மையான மக்களுக்கு சுயமரியாதையும், சமத்துவமும், விடுதலையும் உண்டாக்கச்செய்யவேண்டும். என்பவர்களுக்கும் எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். மற்றென்னையெனில் உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையே ஆகும். அளவுக்கு மீறின பொருமைகொண்ட யோசனையின்மீதே நான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன். உதாரணமாக ஒரு பெரிய கிணர் (குளம்) இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள்; அந்தக் கிணற்றிற்கு மிகப் பழமையானதும் விசேஷமானதுமான ஒரு புராணம் இருப்பதாகவே வைத்துக்

கொள்ளுங்கள்; அதாவது அந்தக்கிணற்று தண்ணீரில் ஒரு துளி தண்ணீரை சாப்பிடுவதனுலோ, அல்லது மேலே தெளித்துக்கொள்வதினுலோ அல்லது ஸ்னனம் செய்வதாலோ நம்முடைய எல்லா பாவமும் மகா பாதகமான காரியம் என்று சொல்லப்பட்ட செய்கைகளைச்செய்த பாவமும் மன்னிக்கப்படுவதுடன் "மோட்சலோகம்" என்பதுகூட கிடைக்கும் என்று எழுதி இருப்பதாகவே வைத்துக்கொள்ளுங்கள்; ஆனுல் இப்போது அந்தக்குளத்துத்தண்ணீரில் ஒரு சிறிது சாப்பிட்டால் விஷபேதி காணக்கூடியதாகவும், அதில் ஸ்நானம் செய்தால் சரீரமெல்லாம் சொரி சிரங்கு வருவதாகவும் இருந்தால் அதற்காக நாம் என்ன செய்வோம்! முதலில் அந்தத்தண்ணீரில் விஷப் பூச்சிகள் உண்டாகி தண்ணீரைக் கெடுத்துவிட்டது என்று கருதி அந்த விஷப்பூச்சிகள் சாகத்தக்க மருந்தை அந்தக்கிணற்றுக்குள் போடுவோம்.

அப்படிப்போட்ட பிறகும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே முன்போலவே இருக்குமானுல் மேல்கொண்டு என்ன செய்வோம்? மருந்துக்குக் கட்டுப்படாத அளவு கெடுதி அந்தத் தண்ணீரில் உண்டாய்விட்டதாகக் கருதி அந்தக் கிணற்றுத் தண்ணீர் முழுவதையும இறைத்து வெளியில் கொட்டி அந்தக் கிணற்றையும் நன்றாய்க்கழுவி விடுவோம்; அந்தப்படி செய்த பிறகும் மறுபடியும் அந்தத் தண்ணீரின் குணம் முன் இருந்தபடியே இருக்குமானுல் அதனுடைய காரணம் என்ன? அந்தக் கிணற்றுக்குத் தண்ணீர் வரும்ஊற்றே விஷத்தன்மை பொருந்தியது, அந்தக்கிணர் அதாவது விஷநீர் ஊற்றுக்கிணர் என்று தானே ஏற்படும்; ஆகவே அப்படிப்பட்ட விஷநீர் ஊற்றுக் கிணற்றை இப்போது என்ன செய்வீர்கள்? பழையபுராணத்தையும் அதில் உள்ள அந்தக் கிணற்றுப் பெருமையையும் மதித்து, அதிலேயே குளித்து, அந்த நீரையே சாப்பிட்டு விஷபேதியையும் சொரி சிரங்கையும் அடைந்துகொண்டிருப்பீர்களா? அல்லது அந்தக்கிணற்றை குப்பையையும் மண்ணையும் கொட்டி மூடிவிடுகிறீர்களா? என்பதை யோசித்துபாருங்கள்.

எனவே மருந்து போட்டு தண்ணீரை சுத்தம் செய்வதும், தண்ணீர் பூராவையும் இறைத்து கிணற்றைக்கழுவுவதும சீர்திரு

த்தவேலையாகும். அடுத்தபடியாக அக்கிணற்றை மண்ணைப் போட்டு நிரவி மூடிவிடுவது என்பது அழிவு வேலையாகும். இந்த முறையில்தான் நான் ஒரு அழிவுவேலைக்காரன் என்பதாக தெரிவித்துக்கொண்டேன்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் சீர்திருத்தம் என்பதெல்லாம் செய்து பார்த்தாய்விட்டது. நான் பார்த்தாய்விட்டது என்று சொல்வது இப்போது நடைபெற்றுவரும் சீர்திருத்தம் என்பதைக் குறித்துமாத்திரமல்ல. ஏனெனில் இது உண்மையான சீர்திருத்தமல்ல. இப்போதைய சீர்திருத்தம் என்று சொல்லப்படுபவைகளெல்லாம் பாமரமக்களை ஏய்த்து அவர்களிடம் செல்வாக்குப் பெறுவதற்காக படித்த கூட்டத்தார்களோ பணக்காரர்களோ சுய நலத்தின் பொருட்டு தங்களில் ஒருவருக்கொருவர் போட்டி போடுவதற்காக கண்டுபிடிக்கப்பட்ட அநேக சூட்சி ஆயுதங்களில் இதுவும் ஒன்றாகும்—இது மேல்நாட்டாரைக்கண்டு பழகிய செய்கையாகும். இம்முறைகள் எல்லாம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவர்களுடைய நன்மையைக்கருதி கண்டுபிடிக்கப்பட்டதல்ல. சீர்திருத்தம் செய்பவர்களுடைய சுய நலத்தை உத்தேசித்தே பெரிதும் கண்டுபிடிக்கப்பட்டதாகும். எனினும் சீர்திருத்தம் பெற வேண்டிய மக்கள் இதை உண்மையாகவே நம்பி வந்திருக்கின்றார்கள். ஆனாலும் அதன் முடிவுகள் எல்லாம் மேலும் மேலும் மோசமான நிலைமைக்கே அதாவது இனிமேல் சுலபத்தில் சீர்திருத்தம் செய்ய முடியாத நிலைமைக்கே போய்க்கொண்டிருக்கின்றன. இதன் முக்கிய காரணம் என்னவெனில், எந்தக் கூட்டத்தாரால் எந்த மனப்பான்மை உடையவர்களால் மக்கள் தங்களில் கெட்டு சீர்திருத்தம் அடைய வேண்டிய நிலைமைக்கு வந்தார்களோ—யாருடைய எந்தக்கூட்டத்தாருடைய சுயநலத்திற்காக மக்கள் பெரிதும் நிலைகுலைய வேண்டியதாயிற்றோ அந்தக் கூட்டத்தார்களேதான் மிகுதியும் சீர்திருத்தம் என்கின்ற துறையை உபயோகித்துப்பயன் பெற்று வந்திருக்கின்றார்கள். இனியும் அவர்களே தான் பெரும்பாலும் இத்துறையில் இருக்கின்றார்கள். ஆகவேதான் எதைச்சொல்லுகிறேனென்றால் திருவள்ளுவர், புத்தர், ராமானுஜர் போன்றவர்கள் முயற்சித்ததாக சொல்லப்படும் சீர் திருத்தங்களைப்பற்றியே சொல்

லுகின்றேன், இவ்விரு, கூட்டத்தாரின் முயற்சியாலும் தான் நான் நமது மக்களின் நிலை சீர்திருத்த முடியாத நிலையை அடைந்து விட்டது என்று சொல்லுகின்றேன்.

## சீர்திருத்தம்.

சமுதாய சீர்திருத்தம் என்பது ஒவ்வொரு நாடுகளில் ஒவ்வொருமாதிரியாக இருக்கின்றது. உதாரணமாக மேல்நாடுகளில் எல்லாம் சமுதாய சீர்திருத்தம் எல்லா மக்களையுமே பொருத்தது. அதாவது சீர் திருத்தம் செய்யப்படவேண்டிய சமூகப்பழக்க வழக்கம் முதலிய நடவடிக்கைகளும் அதன் பலாபலன்களும் அந்நாட்டுமக்கள் எல்லோருக்கும் ஒரேமாதிரியாகவே இருப்பவைகளாகும். நமது நாட்டிலே பெரும்பாலும் சீர்திருத்தம் செய்யப்படவேண்டியவைகள் என்று சொல்லப்படுபவைகள் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு வகையானதாகும்.

நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர்திருத்தம் பொது மனித சமூகத்தில் மக்களின் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வு கற்பித்திருப்பதாகும். இந்த முறை நமது இந்தியாவைத்தவிர வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின்மீது கையாளப்படுவதே இல்லை. அடுத்தபடியானது வாழ்க்கையில் இருந்துவரும் பழக்க வழக்கம், மூட பக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியது போன்ற வகைகள். இவைகள் எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம் என்பதின் பெயர்களாலேயே அவைகளை ஆதாரமாய் வைத்தே நடைபெற்று வருகின்றன. என்றாலும் இவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிற கவலை வெகு காலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதாவது முன் குறிப்பிட்ட புத்தர், இராமானுஜர், திருவள்ளுவர் முதலிய பல பெரியோர்கள் காலத்திலேயே ஏற்பட்டதாக சொல்லலாம். ஆனாலும் மேற்கண்டதுறைகளில் அதுமுதல் இதுவரை ஒரு சிறு காரியத்திலாவது வெற்றியேற்பட்டு அது நமக்குப் பயன்பட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. இப்போது ஏதாவது ஒரு சிறிதளவேனும் மாறுதல் ஏற்பட்டு இருக்கின்றது என்று யாராவது சொல்ல வருவார்

களானுல் அது வெளி நாடுகளில் நடைபெறும் சமூக சீர்திருத்தத்தின் சாரல் அல்லது வெளி நாட்டார் தங்கள் சுயநலத்திற்காக செய்யப்பட்ட வேலைகளின் பலன் என்று தான் சொல்லவேண்டும்.

நம் நாட்டில் நம்நாட்டு மக்களால் சமூக சீர்திருத்தம் என்பது ஒரு சிறிதும் செய்வதற்கு சாத்தியமே இல்லை. ஏனெனில் அவற்றிற்குத் தடையாய் கடவுள் உணர்ச்சியையும் மத உணர்ச்சியையுமே நிறுத்தப்பட்டு இருப்பதால் சுலபத்தில் முடியாததாய் இருக்கின்றது. அன்றியும் இன்றையநிலை சிலருக்கு பயன்படுவதாயுமிருக்கின்றது. இது வரை செய்துவந்த காரியங்கள் எல்லாம் பயன்படாமல் போனதற்கு காரணமே இவைதான் என்றே சொல்லுவேன்.

இதற்கு சமாதானம் சொல்லவேண்டியவைகள் எல்லாம் சொல்லியாய் விட்டது. செய்யவேண்டியவைகள் எல்லாம் செய்து ஆகிவிட்டது, அதாவது புத்தர், கபிலர், திருவள்ளுவர் முதலியவர்கள் சொன்னவைகளுக்கு மேலாகவும், இராமானுஜர் செய்ததற்கு மேலாலாகவும் இனி ஒருவர் வந்து புதிய ஞானத்தை போதித்தோ புதிய காரியத்தைச் செய்தோ விடமுடியும் என்பது இலேவான காரியம் அல்ல. இவ்வளவு செய்தும் எவ்வளவோ பெரியவர்கள் முயற்சித்தும் இதுவரை ஒருபலனும் ஏற்படாமல் போனதால்தான் இப்பொழுதும் சமூக சீர்திருத்தத்திற்கு விரோதிகளாயிருப்பவர்கள் தங்களுடைய தடை வேலையில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறுர்கள். ஆனுலும் அப்போதைய நிலைமையும், செளகரியமும், அரசாங்கமும் வேறு, இப்போதைய நிலைமையும், செளகரியமும், அரசாங்கமும் வேறு என்பதான ஒரு சிறிய திருப்தியானது சமூக சீர் திருத்தக்காரர்களுக்கு அதிக நம்பிக்கை கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும் ஒரு சிறிதும் மாறுபாடடையாமல் இருப்பதால் இந்த நிலையில் நமது நாட்டுச் சமூதாயத்திற்கு சீர்திருத்தம் என்பது முடியாத காரியம் என்றே முடிவு கட்டவேண்டியிருக்கிறது. ஏனெனில் இந்த இரண்டு காரியமும் அதாவது மதம், கடவுள் என்பவைகள் மனிதனின் மூடபக்தியும், குருட்டு நம்பிக்கையும் என்கின்ற அஸ்தி

வாரத்தின்மீதே கட்டப்பட்டிருக்கின்றது. ஏனெனில் குருட்டுநம்பிக்கையின் பயனாய் ஏற்பட்ட கடவுளிடத்தில்தான் பெரிதும் மூடபக்தியால் ஏற்பட்ட மதத்தின் மூலம் கொள்கைகளை வகுத்து வாழ்க்கையை நடத்துகின்றோம். இம்மூட பக்தியையும் குருட்டு நம்பிக்கையையும் ஒழிக்கவேண்டும் என்று சொல்வது சீர்திருத்த வேலையின் பாற்பட்டதல்ல; அது மனிதசமூகத்தின் நன்மைக்காக அழிக்கப்படவேண்டிய அழிவு வேலையின்பாற் பட்டதாகும். ஏனெனில் அடியோடு அழித்து தரைமட்டமாக்கி புதுப்பிக்க வேண்டி இருக்கும் வேலை சீர்திருத்த வேலையாகாது, வேண்டுமானால் புனருத்தாரண வேலை (Reconstruction) என்று சொல்லலாம்.

இவ்வேலையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான மன உறுதியும் சந்தேகமற்ற தெளிவும் இருக்கவேண்டும். அஃதில்லாமல் ஆவேசத்தில் தலையிட்டுவிட்டால் தற்கொலையாகவே முடியும். ஏனெனில் பலமானதும், இடையறாததுமான எதிர்ப்புகளுக்கிடையே இவ்வேலை செய்யவேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் வெகுகாலமாக மனித சமூக இருதயத்தில் கலந்து ஊறிவிட்டதும், இந்நிலை வெகுபேரினுடைய சுயநலத்திற்கு அனுகூலமாயிருப்பதும் ஆகிய இரண்டு காரணங்களால்தான்.

ஆதலால் எந்த எந்தக் காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச்சீர்திருத்தத்திற்கு தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது கிளைவேரையாவது மீத்துவைத்துக்கொண்டு சீர்திருத்தம்செய்யலாமென்று எந்தவிதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றிபெறமாட்டார்கள் என்பது எனதுறுதி.

நிற்க சிலர் சொல்லுவதுபோல் சீர்திருத்தக்காரர்களுக்கு நிதானமும் சாந்தமும் அளவுக்கு மீறி வேண்டும் என்பதையும் வெறுப்பும் பிடிவாதமும் அடியோடு கூடாது என்பதையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது.

நான் இந்தப்படி சொல்லுவதால் அநேக பெரியோர்களுடைய அபிப்பிராயத்திற்கு முரண்பட்டவனாக பலருக்கு காணப்படலாம். ஆம் இவ்வித அபிப்பிராயங்களில் நான் நன்றாக முரண்பட்டவனாகத்தான் இருக்கின்றேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். மேற்கண்ட பெரியார்கள் என்று சொல்லப்பட்டவர்களின் பொறுமையையும் நிதானத்தையும் சாந்தத்தையும் துவேஷமற்ற தன்மையையும் நான் என் அறிவுக்குளட்டியவரை கவனித்துப்பார்த்தேன். அவைகள் மிகுதியும் பயத்தாலும், ஒருவித பலக்குறைவினாலும் இவ்விஷயத்தில் உபயோகப்படுத்தப்பட்டவைகள் என்றே முடிவு கண்டேன்.

அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே எதிர்ப்பு பலமாய்விடுமே" என்கிற பயமும் பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ, அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள். அக்குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் சீர்திருத்தம் ஒருக்காலமும் பயனளிக்கவே முடியாது; அன்றியும் சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்வித கட்டுப்பாட்டிற்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறிவதைக் கைக்கொள்வதுதான் சீர்திருத்தத்திற்கு முதன்மையான பாதையாகும். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சீர்திருத்தம் என்பது அதுவும் நம் நாட்டை பொறுத்தவரை சிறிதும் பயனற்றது.

நிதானமும், சாந்தமும், பொறுமையும் கட்டுப்பாடுங்கொண்டு வெறுப்பில்லாமலும், துவேஷமில்லாமலும், நல்ல வார்த்தையினும், கூட்டுறவிலும், நயமாகவும், கெஞ்சியும் நமது நாட்டில் எத்தனை காலமாக சீர்திருத்தங்கள் செய்து வந்திருகிறது? இதுவரை செய்துவந்த சீர்திருத்தங்கள் என்ன ஆயிற்று? இன்னும் எத்தனை நாளைக்கு இதுபோலவே பரீக்ஷை பார்ப்பது என்கிற விஷயங்களை யோசித்தால் மேற்கண்ட வார்த்தைகள் சீர்திருத்தத்திற்கு விரோதிகளாயுள்ளவர்களிடம் மரியாதை பெறுவதற்காகவும் தங்களது சொந்த புகழுக்காகவும், பெருமைக்காகவும் பேசப்பட்ட வார்த்தைகள், அல்லது பலவீனத்தின் தோற்றம் என்றுதான் ஏற்படுமேயொழிய அவற்றில் வேறொன்றுமேயிருக்காது. சிலர் இம்

மாதிரியான நமது அபிப்பிராயத்திற்கு விரோதமாய் சில பெரி யோர்களான விவேகானந்தர், காந்தி முதலியோர்களுடைய வார்த் தைகளை எடுத்துக் காட்டுவார்கள். இம்மாதிரியான அப்பெரி யார்களுடைய வார்த்தைக்கு நான் முற்றும் முரண்பட்டவன் என்பதை நான் கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். காரணம் அவ்வார்த்தைகள் சொன்ன பெரியோர்களை சுவாமியாகவும், மகாத் மாவாகவும் மக்கள் கொண்டாடினார்கள்; கொண்டாடுகிறார்கள். படம் வைத்து பூசிக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவ்வார்த்தைகளால் சீர்திருத்தம் வேண்டிய மக்கள் அடைந்த கதி யென்ன; எந்த ஒரு அபிப்பிராயத்தையும் அதனால் ஏற்படும் பல னைக்கொண்டுதான் மதிக்க வேண்டுமேயொழிய வார்த்தையினு டைய இனிப்பைக் கொண்டும், அழகைக்கொண்டும் மதிப்பது அறி வுடைமை ஆகாது என்று சொல்லுவேன். சீர்திருத்தம் வேண் டியவர்கள் இதுவரை காட்டின பொறுமையும், கெஞ்சின கெஞ்சும் பேசின இனிமையான வார்த்தையும் போதாது என்று யாராவது சொல்ல முடியுமா? அல்லது மக்கள் படும் கஷ்டம், அவர்கள் அறிவு அடைந்த தன்மை, அதனால் நாடு கெட்ட நிலைமை ஆகியவைகள் இப்பொறுமையினுடையவும், சாந்தத்தினுடையவும் கெஞ்சுவத னுடையவும், பரீக்ஷைக்கு போதாது என்றாவது யாராவது சொல்ல முடியுமா? எனவே பொறுமையும், சாந்தமும் சகிப்புத்தன்மை யும் இவ்விஷயத்தில் காரியத்தின் அனுகூலத்தை உத்தேசித்து காட்டப்படவேண்டியதே அல்லாமல், வெறும் "பொறுமைக்கும், சாந்தத்திற்கும் உருவாம்" என்கின்ற பெயர் பெறுவதற்கல்ல.

அன்றியும் சிலர் "சீர்திருத்தம் செய்வதின்மூலம் பழைய சின் னங்களையும், ஓவியங்களையும், கலைகளையும் அழித்து விடாதீர்கள்" என்கின்றார்கள். இந்தக் கூட்டத்தார்கள் எந்த பழையசின்னம், ஓவியம், கலை முதலியவைகளை மனதில் நினைத்துக்கொண்டு சொல் லுகிறார்களென்று நான் கண்ணியமாய் நினைக்கின்றேனே அந்தச் சின்னமும் ஓவியமும், கலைகளுமேதான் நம்மையும் நம்மக்களையும் நமது நாட்டையும் பாழாக்கியதுடன் ஒவ்வொரு அறிவாளி மனதி லும் சமுதாய சீர்திருத்தம் செய்து தீரவேண்டும். இல்லாவிடில் வேறு எந்த விதத்திலும் நமக்கு கதிமோக்ஷமில்லை என்று நினைக் கும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டுவிட்டது.

உதாரணமாக இராமானுஜர் நாமத்தையும் பூணூலையும் பழைய சின்னம் என்பதாகக்கருதி அதைவைத்துக்கொண்டு 'பறையன்' 'சக்கிலி' 'பள்ளன்' என்பவர்களையெல்லாம் பிடித்து நாமமும் பூணூலும் போட்டு மக்களைச் சமத்துவமடையச்செய்வதென்பதான சீர்திருத்தம் செய்தார் என்பதாகச் சொல்லப்படுகின்றது. இதனால் பழைய சின்னம் காப்பாற்றப்பட்டதே தவிர, மக்களுக்கு சமத்துவம் கிடைத்ததா? சமத்துவ உணர்ச்சி உண்டாயிற்றா? நாமமும் பூணூலும் உடையவர்களுக்குள்ளாகவே உயர்வு தாழ்வும், அதுகள் இல்லாதவர்களை தாழ்மையாய் கருதுவதும் இன்றும் சூரியன்போல்துலங்குகின்றது. மற்றும் பழைய சின்னங்கள் என்பதான கோயில்களை எடுத்துக்கொள்வோம். கோயில் என்றால் சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ தயாபரத்தன்மையும், கொண்ட கடவுள் என்பவர் இருக்கும் இடம் என்றும், அவரை வணங்கவேண்டிய இடம் என்றும் சொல்லப்படுகின்றது. அவை மக்கள் சென்று வணங்கி உய்வதற்கே உண்டாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது இப்படிச் சொல்லப்படும் கோயில்களின் நிலைமை என்ன? அதனால் மக்களுக்கு பலன் என்ன? தற்காலம் என்ன காரியங்களின் கொடுமைகள் சகிக்கமாட்டாமல் சீர்திருத்தம் வேண்டும் என்று மக்கள் கருத இடம் கொடுத்ததோ அந்தக்காரியங்களுக்கு எல்லாம் இந்த சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ தயாபரத் தன்மையும், கொண்டதான கடவுள் என்பது குடி இருப்பதாகச் சொல்லும் கோயில்களே காரணமாயிருக்கின்றன என்பதை யாராவது மறுக்க முடியுமா? பழைய ஓவியங்கள் என்பவைகளை எடுத்துக்கொண்டால் அவையும் உண்மையான சீர்திருத்தத்திற்கு எவ்வளவு தடையாய் இருக்கின்றன என்பது விளங்காமல் போகாது. அதுபோலவே பழைய கலைகள் என்பவைகளை எடுத்துக்கொண்டால் அதுவே ஒரு பெரிய மலையாக இருக்கும்.

உதாரணமாக வேதம் என்றும், சாஸ்திரம் என்றும், புராணம் என்றும், சொல்லப்படுவனவாகிய "மனித வர்க்கத்தின் வாழ்க்கை நலத்திற்கு இலக்காக உண்டாக்கப்பட்டது", என்று சொல்லும்படியான ஆதாரங்களும், அவைகளுள் முக்கிய கலைகளாகக் கொண்டாடப்படும் பலபுராணங்களும், கடவுள்களின் அவதாரங்களின்நடப்பு

கள் என்று சொல்லப்படும இதிகாசங்களும் இதுவரை மக்களுக்கு என்ன நன்மையைக் கொடுத்து வந்திருக்கின்றன என்று யோசித்துப் பாருங்கள். அதிலும் தென் இந்திய வாசிகளும், அவர்களுள் சிறந்த பண்டிதர்கள் என்பவர்களும் பக்தி விசுவாசத்துடனும் கலா ஞானத்துடனும் கொண்டாடும் புராணங்கள், இதிகாசங்களாகிய பாரதம், இராமாயணம், சிவபுராணம், விஷ்ணு புராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம், என்பவைகள் போன்ற கலைகளால் இதுவரை மக்களுக்கு ஏற்பட்ட பலன் என்ன? அவைகளில் காணப்படாத மனிதத்தத்துவத்திற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமான காரியங்கள் வேறு எந்தக் கலைகளிலாவது, கலைகள் அல்லாத வெறுக்கப்பட்ட புஸ்தகங்களிலாவது, வெகு கீழ்தர மக்கள் கூட்டத்தின் நடவடிக்கையிலாவது காண்கின்றோமா? என்பதை சற்று கவனித்துப் பாருங்கள்.

அறிவும் எவ்வித சீர்திருத்தத்தையும் தடை செய்யும்படியான முட்டுக்கட்டைகள் அக்கலைகள் என்பதற்குள் மலிந்து கிடக்கின்றதா இல்லையா? என்பதையும் சற்று பொது நோக்குடன் யோசித்துப் பாருங்கள்.

இன்றையதினம் அறிவாளிகள் வெகு கவலையுடன் செய்ய ஆசைப்படும் சீர்திருத்தங்களுக்கு எதிரிகளாயிருப்பவர்கள் தங்களுடைய அதிக பலம் பொருந்திய ஆயுதங்களாக இந்தப் பழைய சின்னங்கள் ஓவியங்கள் கலைகள் என்பவைகளையே உபயோகித்துக் கொண்டு அதாவது அவைகளிலிருந்தே ஆதாரங்கள் எடுத்துக் காட்டி சீர்திருத்தக்காரர்களை எதிர்த்துதடையுத்தம் செய்கிறார்களா இல்லையா ? என்பதையும் நீங்களே யோசித்துப் பாருங்கள்.

ஆனால் அச்சின்னங்களுக்கும் கலைகளுக்கும் வக்காலத்துப் பேசுபவர்களால் சீர்திருத்தக்காரர்களுக்கு அனுகூலமான ஆதாரங்களும் அவைகளில் எங்கேயோ ஒன்று இரண்டு பொதிந்து கிடப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது வெறும் மயக்கம் என்பதும் நம்மை ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தக்கூடியது என்பதும் எனது அபிப்பிராயம்.

ஏனெனில் அவைகள் எல்லாம் கடவுள் வந்து நேரில் செய்த தாகவும் சொன்னதாகவும் மற்றும் நம்மால் தாங்கமுடியாத நிபந்த னைகள் கொண்டதும் மனிதன் நம்பமுடியாததும், மனிதத்தன் மைக்கு மீறினதுமான சம்பவங்கள் கொண்டதாகவே இருக்கின்ற னவேயன்றி, அனுபோகத்தில் இருக்கின்றதாகவோ அனுபோகத் திற்கேற்றதாகவோ இருக்கின்றதாகக் கருதி எடுத்துக் கையாளக் கூடியது அதில் ஒன்றும் காணக்கூடுவதில்லை. அப்படி காணக் கூடியது என்பதாக எதையாவது எடுத்து வியாக்யானம் செய்யக் கூடியதாயிருந்தாலும் அதையாரும் ஒப்புக்கொண்டதாக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவோ அமுலில் கொண்டுவரச்செய்யவோ அதற்கு சக்தியுமில்லை.

உதாரணமாக பறையன் பள்ளன் என்பவர்கள் (கொடுமை செய்யப்பட்டவர்கள்) எல்லோரும் கோயிலுக்குள் போனதாகவும் கடவுள் ஏற்றுக்கொண்டு அவர்களை தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டதாகவும் சொல்லப்படுவதை பழைய கலைகளாக உபயோகிக் கின்றார்கள், ஆனால் அவை இப்போது என் அனுபோகத்தில் இல்லையென்றால் "அந்தப்பறையன் வேறு, இந்தப்பறையன் வேறு" என்று செல்லி வெளியே தள்ளிவிடுகின்றார்கள். அப்படியானால் அம்மாதிரி கலைகளை எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? மனிதருக் குத்தான் பறையன் என்கின்ற வித்தியாசமிருக்குமே ஒழிய சாமிக் குக்கூடவா வித்தியாசம் என்றால், "கலைகளுக்கு ஆபத்து வந்து விட்டது" என்று கூப்பாடு போடுகின்றார்கள்.

ஆதலால் "இந்நாட்டிலுள்ள பழைய சின்னங்களையும் ஒவியங் களையும் கலைகளையும் காப்பாற்றிக்கொண்டு சீர்திருத்தம்செய்யவேண் டும" என்று சொல்லிகின்றவர்கள் என்றைக்குமே வெற்றி பெற மாட்டார்கள் என்று உறுதியாய்ச் சொல்லுவேன் அன்றியும் இதுவரை நமது நாடு சீர்திருத்தப்பலன் அடையாததற்கு இந்த உணர்வுக்காரர்களே தான் முக்கிய காரண கர்த்தர்கள் என்றுப் சொல்லுவேன். எனவே இந்த சில உரைகளால் சீர்திருத்தம் என்பதுபற்றியும் சீர்திருத்தக்காரர்கள் நிலைமையைப்பற்றியும் பேசி னேன்.

## இனி சீர்திருத்தப்பட வேண்டிய விஷயங்கள்.

என்பதில்—முதலாவதாக கடவுளும் மதமுமே முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டியவிஷயங்களாகும் ஏனெனில், முன்பு நான் சொன்னதுபோல் நம்முடைய எவ்வித சீர்திருத்தத்திற்கும் சீர்திருத்த எதிரிகளால் இவ்விரண்டுதான் விரோதமாய் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடவுளைப்பற்றி இங்கு நான் அதிகமாகப் பேச வரவில்லை. அதைப்பற்றி எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவும் நல்லதென்றே சொல்லுவேன். ஏனெனில் அது ஓட்டைக் குடத்தில் தண்ணீர் சேந்துகின்ற மாதிரி இழுக்குப்போது குடம் நிறைய தண்ணீர் மொண்டு பாரமாய் வரும்—மேலேவந்து சேரும்போது வெறுங்குடமாயிருக்கும். எத்தனை நாளைக்கு இதே வேலையில் இருந்தாலும் தண்ணீர் வந்து கரை சேராது. அதைப்போலவே கடவுள் என்பது வீண் தர்க்கத்திற்கேற்ற பேச்சேஒழிய, காரியத்திற்கேற்ற பேச்சல்ல. இதுவரையில் வாதம் செய்தவர்கள் கண்ட முடிவுகளில் மிகவும் முக்கியமானது "நமது கண்ணுக்கும், மனதிற்கும், அறிவின் உணர்ச்சிக்கும் எட்டாத ஏதோவொன்று இருக்கின்றது" என்றும், அதிலும் தேர்ந்த முடிவாக "நம்பினால் தான் உண்டு" என்றும் சொல்லும்படியானதுகளே ஆகும். இதற்காக மனதிற்கும் கண்ணுக்கும் அறிவுக்கும் எட்டாத ஒன்றை ஏற்றுக்கொண்டு தக்க ஆதாரம் இல்லாவிட்டாலும் நம்பித்தான் ஆக வேண்டும் என்று நாம் யாரைத் தொந்திரவு செய்வது? அல்லது அம்மாதிரியான தொந்தரவினால் யாருக்குத்தான் என்ன லாபம்?

அடுத்தாப்போல் மதம் என்பதைப்பற்றியோவென்றால் அது ஒருபொருளற்றதன்மையது. என்னவெனில் இதுவரை மதமானது உலகத்திற்கு எவ்விதமான பலனையும் கொடுத்திருப்பதாய் விளங்கவில்லை. எந்த மதக்காரனுக்காவது ஒரு சாந்தி ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. ஆனால் மதச்சண்டைக்கும், மதப் பிரசாரத்திற்கும் குறைவில்லை.

ஒவ்வொரு மதக்காரனும் தன் மத மூலமாகத்தான் மக்கள் முழுவதும் மோக்ஷத்திற்குப்போக முடியுமென்றும் தன் தன் மதத்

தலைவன்தன் கடவுள் மகன் என்றும், கடவுள் தூதன் என்றும் கடவுள் அவதாரம் என்றும், அவரவர்கள் சொன்னதுகள் எல்லாம் கடவுளால் செல்லப்பட்டவைகள்தான் என்றும்சொல்லுகின்றார்கள். இவர்களுக்குள்ளும் கிளைகள் பல இருக்கின்றன. இதில் யார் மெய்யர்களாயிருக்க முடியும் என்று கண்டுபிடிக்க முடிவதில்லை. ஒவ்வொரு மதக்காரனும் அவனவன் மதத்தை நம்பாதவனுக்கு பாவம் என்றும் நரகம் என்றும் மோக்ஷமில்லை என்றும் சொல்லுகிறான். மனிதனாகப் பிறந்தவன் இந்த மதத்திற்காக எத்தனை நரகத்திற்குத்தான் போய்வருவது? பொதுவாக மனிதர்களை கடவுளிடத்தில் அனுப்புவதற்கு மனிதனின் குற்றங்களை மன்னிப்பதற்கு கடவுளுக்கு இத்தனை ஏஜண்டுகள் வேண்டுமா? இவர்களுக்குள் இத்தனை போட்டிகள் வேண்டுமா? இந்த மனிதர்கள் கடவுளை அடைய இந்த மதத்தலைவர்களுக்கு இவ்வளவு கவலையா? என்பவைகளை நிதானமாய் நடு நிலையிலிருந்து யோசித்துப்பார்பீர்களானால் மதத்தின் அசம்பாவிதமும் ஆபாசமும் விளங்காமற்போகாது.

எப்படி ஒரு மனிதன் மக்களின் நலத்திற்காகவும் பாதுகாப்புக்காகவும் தான் அரசனாகவேண்டும் என்று கருதி ஒரு அரசாங்கத்தை ஸ்தாபித்து, பிறகு மக்கள் நலம் மறைந்து, தான் அரசாட்சியை விஸ்தரிப்பதில் கவலைகொண்டு, கொலை முதலியவைகளைச் செய்து, அயல் நாடுகளைப் பிடிக்கும் கவலையில் மூழ்கியிருக்கின்றானோ அதுபோலவே மக்கள் நலத்திற்கு மதம் என்று சொல்லி, மதத்தலைவனாகி, கடவுள் மகனாகி, தூதனாகி, அவதாரக்காரனாகி, உலகத்திலுள்ள மக்களை எல்லாம் தன் மதத்தில் சேர்க்கும் ஆசை கொண்டு, ஆள் பிடிக்கும் கவலையில் மூழ்கி இருக்கின்றான் என்பதே பல மத சம்பந்தமான எனது அபிப்பிராயமேயொழிய மதத் தலைவர்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றுவது, அவர்கள் சொன்னதெல்லாம கடவுளால் சொல்லப்பட்டவைகள் என்றுவது, அவர்களிடத்தில் கடவுள் தன்மைகள் இருந்தது என்றுவது ஒப்புக்கொள்வது முடியாத காரியமாயிருக்கின்றது. ஏனெனில் இவைகளையெல்லாம் ஒப்புக்கொள்வதானால் பல கடவுள்களையும், பல ஏஜண்டுகளையும் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கின்றது. ஒரு கடவுள்பாடே திண்டாட்டத்தில் இருக்கும்போது பல கட

வுள்கள் சங்கதி எப்படி நிலைநிற்க முடியும்? ஆதலால் மதம் என்பதை கடவுள் என்பவனிடத்தில் சம்மந்தப்படுத்துவது பொருத்தமற்றதாகும்.

மற்றப்படி மதம் என்பது மனித வாழ்க்கைக்கான கொள்கைகளை வகுத்து அந்தந்த நாட்டு நிலைமைக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது என்று சொல்வதானால் ஒருவாறு அதைப்பற்றி யோசிக்கலாம். அதுவும் அந்தந்த கால நிலைமைக்குத்தக்கபடி கொள்கைகளை மாற்றிக்கொள்ளக்கூடிய தன்மையை உடையது என்பதானால் மாத்திரம் தான் மதத்தைப்பற்றி யோசிக்கலாம். அப்படிக்கில்லாமல் "மதக்கொள்கைகள் என்பவை எல்லாம் மாற்ற முடியாதது கடவுளின் மகனோ, தூதனோ, அவதாரமோ சொன்னது, கடவுள் தன்மை பொருந்தியது, அக்கொள்கைகளின் அருகில் வேறு யாரும் நெருங்கக்கூடாது" என்று சொல்வார்களானால் அந்த மதங்களை மதங்களாகவே-ஆணவமாகவே கருதி அவற்றை அடியோடு ஒழிக்க முயற்சிக்க வேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்களின் முக்கிய கடமைகளின் முதன்மையான கடமையாகும். ஏனெனில் சமுதாய சீர்திருத்தம் என்பது காலத்திற்கு ஏற்றவண்ணமும் அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஏற்றவண்ணமும் மாறுபாடுகளைச் செய்ய ஒப்புக்கொள்ளுவதேயாகும். எனவே அத்தகையவர்கள் முன்னால் "எக்காலத்திலும் எந்த நிலையிலும் மாற்றப்படக்கூடாது" என்கின்றதானமதத்தடைகள் வந்து குறுக்கிடுமானால் எந்த விதத்தில் அவற்றை வலம் வந்து வணங்கிக் கொண்டிருக்க முடியும்? கொஞ்சமும் கலங்காது உறுதியுடனும் தைரியத்துடனும் அவைகளைத் தகர்த்தெரிய எவன் முன்னுக்கு வருகின்றானோ அவன்தான் சமுதாய சீர்திருத்தத் துறையை அணுகமுடியும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். நிற்கசமுதாய சீர்திருத்தக்காரர்கள் அடுத்தபடி கவனம் செலுத்தவேண்டியது.

## ஆண் பெண் தன்மைகள்.

பொதுமக்களில் பெண்கள், தீண்டாதார்கள் என்பவர்களைவிட மிக மோசமாக அழுத்தப்பட்டிருக்கிறார்கள் "புலிக்கு ஆடு கடவுளால் ஏற்படுத்தப்பட்ட உணவு" என்பதுபோலவும் 'பூனைக்கு

எலிகடவுளால் ஏற்படுத்தப்பட்ட உணவு" என்பதுபோலவும் ஆணுக்குப் பெண் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட அடிமை என்பதாகக்கருதி நடத்தப்பட்டு வருகின்றார்கள். உண்மையிலேயே இப்படி ஒரு கடவுள் நீதி ஏற்படுத்தியிருப்பாரானால் முதலிலே அந்தக் கடவுகளை ஒழித்துவிட்டுத்தான் வேறு காரியம் பார்க்க வேண்டும். ஐயோ பாவம்! "ஏழைக்கடவுள்" மீது எத்தனை பழிகள்தான் போடுவது என்று தோன்றினாலுங்கூட, அந்தக் கடவுளுக்கு இவ்வளவையும் சகித்துக்கொண்டு உயிர் வாழும்படியான அவசியம் என்ன வந்தது. என்பது நமக்குத் தெரியவில்லை; கஷ்டமாயிருந்தால் ஒழிந்து தொலையட்டுமே என்றுதான் தோன்றுகின்றது.

## கற்பு.

உலகத்தில் சிறப்பாக நமது நாட்டில் எல்லாவற்றையும் விட பெண்கள் நிலையே மிக மோசமானது. அதிலும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பதிவிரதத் தன்மையை நினைக்கும்போது மனம் குமுறுகின்றது. அதாவது பதிவிரதம் என்கின்ற கற்புதான் அவர்களுடைய கடமையாம் அதுவும் எத்தகைய பதிவிரதம் என்றால் தன்னைகொண்டவனாகிய புருஷன் பழைய சாதம் சுடுகின்றது என்றால் விசிறிஎடுத்து விசிறவேண்டுமாம். தண்ணீர சேந்தும்போது கணவன் கூப்பிட்டால் அப்படியே கயிற்றை விட்டுவிட்டு ஓடிவர வேண்டுமாம். ஓடிவந்தால் மாத்திரம் போதாதாம். அந்தக் கயிறும் பாத்திரமும் கிணற்றின் நடுவே ஓடினவள் திரும்பிவருமளவும் இராட்டினத்தில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டுமாம் இல்லாவிடில் அந்தப்பெண் கற்புடைய பதிவிரதை அல்லவாம். எனவே, சகோதரர்களே! பெண்களுடைய நிலைமைக்கு வேறு என்ன உதாரணம் வேண்டுமென்கிறீர்கள்? அன்றியும் ஆண்கள் பிறவி மூர்க்கப்பிறவி அல்லது தூர்த்தப்பிறவி என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டுமென்கிறீர்கள்? உங்கள் 'கடவுள்கள்' தங்கள் மனைவிகளை இப்படியா நடத்துகின்றன? தலையிலும், நாக்கிலும், மார்பிலும், தோளிலும், தொடைகள்மீதும் தங்களது மனைவிகளை வைத்துக்கொண்டிருக்கிற கடவுள்களைக் கற்பித்துக்கொண்ட உங்கள் புத்தி இவ்விதம் சென்றதர்க்குக்காரணம் என்ன என்பது

எனக்கு விளங்கவில்லை. பெண்களை அடிமைகளாக்கியதன் பலனாய் மக்கள் அடிமைகளால் வளர்க்கப்பட்டார்கள்; அடிமைகளால் வளர்க்கப்பட்டதன் பலனாய் மக்கள் சகலத்திற்கும் அடிமைகளானார்கள். எனவே மக்கள் அடிமைத்தன்மையினின்றும் நீங்கவேண்டுமானால் பெண்கள் அடிமை நீங்க வேண்டும்! பெண்கள் அடிமை நீங்க வேண்டும்!! முக்காலமும் பெண்கள் அடிமை நீங்க வேண்டும்!!!

பெண்கள் அடிமை நீங்கவேண்டுமானால் முதலாவதாக அவர்களைக் கற்பு என்னும் சங்கிலியில் கட்டிப்போட்டிருக்கும் சட்டை உடைத்தெறிய வேண்டும், கட்டுப்பாட்டிற்காகவும், நிர்ப்பந்தத்திற்காகவும் கற்பு ஒருக்காலமும் கூடாது! கூடாது!! கூடவே கூடாது!!! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும், காதல் அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கிக்கட்டட்டும், அதைப்பற்றி நமக்குக்கவலையில்லை. ஒரு பிறவிக்கு ஒரு நீதி என்கின்ற கற்பு மாத்திரம் அடிமைப்படுத்துவதில் ஆசைகொண்ட மூர்க்கத்தனமே அல்லாமல் அதில் கடுகளவு யோக்கியமும் நாணயமும் பொறுப்பும் இல்லவே இல்லை

இந்த விஷயங்களில் பெண்களுக்கு ஆண்கள் உதவிபுரிவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் வேலையே ஆகும். வீரப்பெண்மணிகள் தாங்களாகவேதான் முன்வந்துழைக்க வேண்டும். இதற்காக அரசாங்கத்திலும் அநேகம் செய்யப்படவேண்டி இருக்கின்றன. ஆனால் பெண் அரசாக்ஷியால் (விக்டோரியா மகாராணி) ஆகாத காரியம் ஆண் அரசாக்ஷியால் ஆகுமா என்பது சிலருக்குச் சந்தேகமாயிருக்கலாம். பெண்களின் உறுதியான ஊக்கமும் உழைப்பும் இருந்தால் கண்டிப்பாய் முடியும். ஆனாலும் சமுதாய சீர்திருத்தக்காரர்கள் இதை மிகவும் முக்கியமாய்க் கருதவேண்டியது என்பதாக முன்னமேயே சொன்னேன். பழக்கத்தையோ, வழக்கத்தையோ, மதத்தையோ, வேதத்தையோ, சாஸ்திரத்தையோ கருதிக்கொண்டு பயப்பட்டு விடாதீர்கள்; காலதேச வர்த்தமானத்தைப் பாருங்கள். துருக்கியையும் ஆப்கானிஸ்தானத்தையும், சைனாவையும் பாருங்கள். துருக்கியப் பெண்களின் கண்களுக்கும் சீனப் பெண்களுடைய கால்களுக்கும் விடுதலை ஏற்பட்டுவிட்டன என்பதை நினையுங்கள்.

## விதவைத்தன்மை.

அடுத்த விஷயமாக உலக வாழ்க்கையில் இருந்து உயிருடன் பிரிக்கப்பட்ட சகோதரிகளான விதவைகள் என்பவர்களைப்பற்றி சிலவார்த்தைகள் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஜீவ சுபாவத்திற்கே பொருந்தாததான ஒரு நிபந்தனையை நமது சகோதரிகள் மீது சுமத்தி கொடுமைப்படுத்துவதான விதவைத்தன்மை என்பது எந்த விதத்திலாவது பொருத்தமுடையதா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இந்நிலை பெண்களை அடிமைகளாய் நடத்துகின்றோம் என்பது மாத்திரமல்லாமல் நம்மைப் போன்ற மனித ஜீவன்களிடத்தில் நாம் எவ்வளவு கொடுமையாய் அறிவீனமாய் நடந்துகொள்ளும் சுபாவமுடையவர்களாய் இருக்கின்றோம் என்பதற்கு அறிகுறியாகும்.

பெண் தெய்வங்களையே குல தெய்வமாய்க்கொண்டும் உலகத்தையும், நதியையும், சக்தியையும் பெண்ணாய்க்கருதும் மக்களைக் கொண்டதும் இரண்டு பெண்டாட்டிக்குக் கம்மியில்லாதததும், பெண்களை தலையிலும், நாக்கிலும், மார்பிலும் வைத்துக்கொண்டிருப்பதுமான கடவுள்களையுடையதும் 1000, 10000, 60000 பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்ட ராஜாக்கள் ஆண்டதுமான இந்த நாட்டில் பெண்கள் வதைக்கப்படுகின்றார்கள்! உதைக்கப்படுகின்றார்கள்!! அதிலும் விதவைத்தன்மையால் மிகவும் வதைக்கப்படுகின்றார்கள்.

பெண்கள் சம்பந்தமான வேறு எந்த காரியத்திற்காவது ஆண்கள் தங்கள் சுயநலத்தைக்கொண்டு கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லுவதானாலும் இந்த விதவைத்தன்மையை எதற்காக கற்பித்தார்கள் என்பதே நமக்கு விளங்கமாட்டேன் என்கின்றது.

இதில் எவ்வித அறிவுடைமையும் இருப்பதாக நமக்குத்தோன்றவில்லை. இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம் என்பதும் அறியக்கூடவில்லை. ஒரு சமயம் சந்நியாசிகளையும் அதிதிகளையும் உத்தேசித்து இப்படி ஒரு கூட்டம் இருக்கவேண்டும் என்பதாகக்

கருதினார்களா அல்லது பெண்கள் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது ஆதலால் இம்மாதிரி செய்வதன் மூலம் மற்றப்பெண்களுக்கு புருஷன் கிடைக்கட்டும் என்று செய்தார்களா அல்லது வேறு என்ன காரணத்திற்காக இப்படிச் செய்தார்கள் என்பதைக் கண்டு பிடிப்பதற்கே முடியாததாயிருக்கின்றது. எப்படியிருந்தாலும் இதைப்போன்ற முட்டாள் தனமானதும், சித்திரவதைக் கொப்பான கொடுமையானதும், இனி அரைக்ஷணமும் பொறுத்துகொண்டிருக்க முடியாததுமான காரியம் உலகில்வேறு இல்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த விதவைத் தன்மை ஒழிய வேண்டுமானால் பெண்கள் மிக்க தைரியமாக பாடுபடவேண்டும், இது விஷயத்தில் மானம் இன்னது அவமானம் இன்னது என்பதாகவோ, அவர்கள் என்ன சொல்வார்கள் இவர்கள என்ன நினைப்பார்கள் என்பதாகவோ சற்றும் கருதாமல் தைரியமாய் விதவைப்பெண்கள் வெளிக்கிளப்பி விட வேண்டும், தங்களுக்கு இஷ்டமான கணவன்மார்களைத் தாங்களே தெரிந்தெடுத்துக்கொண்டதாய் வெளிப்படுத்திவிட வேண்டும், இவ்விஷயத்தில் சற்று சௌகரியக் குறைவு இருந்தாலும் அதை வலிமையுடன் பொறுத்துக்கொண்டால் அடுத்து வரும் சகோதரிகளுக்கு மிகுதியும் பலனளிக்கும். அநேக நாடுகளில் இவ் விதவை மணம் இருந்து வருகின்றது நமதுநாட்டிலேயே சிலவகுப்புகளில் இவ்வழக்கம் நடைபெறுகின்றது. ஆகையால் இதில் இனி தாட்சண்ணியம் பார்ப்பதென்பது சற்றும் பொருந்தாதென்றே சொல்லுவேன். இதற்கு விதவைகள் அல்லாத ஸ்திரீகளும் கொடுமைப்படுத்தப்பட்ட ஸ்திரீகளுக்குப் புருஷன் சம்பாதித்துக்கொடுப்பதிலும், அவர்களுக்கு தைரியமூட்டி கொடுமைப்படுத்தப்பட்ட குடும்பங்களிலிருந்து வெளிப்படுத்தித் தனியாகவும் சுயேச்சையாகவும் வாழச்செய்யவும் தக்க வழியில் கவலைஎடுத்துக்கொண்டு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். நான் ஏன் இப்படிச் சொல்லுகின்றேன் என்றால், இக்கொடுமையை ஒழிக்க இதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று கண்டதால்தான்.

## ஜாதி வித்தியாசம்.

மக்களில் ஜாதி வித்தியாசம் என்பது கற்பிக்கப்பட்டதே ஒழிய தானாக ஏற்படவில்லை. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு ருஜு இந்த ஜாதி வித்தியாசமே ஆகும். இது இன்னும் நிலைத்திருப்பது என்றால் இந்த நாடு மிருகப்பிராயத்தில் இருந்து மனிதப்பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத்தான் காட்டுகின்றது. எதற்காக ஒரு மனிதன் உயர்ந்த ஜாதியாகவும் மற்றொரு மனிதன் தாழ்ந்த ஜாதியாகவும் கருதப்படுகின்றான் என்பதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கின்றதா? பிறவியிலாவது வாழ்க்கையிலாவது ஒழுக்கங்களிலாவது அறிவிலாவது வித்தியாசங்கள் காணப்படுகின்றதா? ஒன்றுமே இல்லையே. அப்படி ஏதாவது ஒரு வழியில் பிரிந்திருந்தாலும் அதற்கு சமாதானமாவது சொல்ல முயற்சிக்கலாம். ஒரு காரணமும் இல்லாமல் இது வெறும் பிறவி மாத்திரத்தில் ஏதேச்சாதிகாரமாய் செய்யப்படும் கொடுமையாகத்தானே விளங்குகின்றது. இந்த முறை மக்களின் ஒழுக்கத்திற்கே நேர் விரோதமாக இருக்கவில்லையா?

சகோதரர்களே! இந்தக்கொடுமையை ஒப்புக்கொள்ளாதவர்கள் யார்? இதை ஒழிக்க வேண்டுமென்று சொல்லதவர்கள் யார்? இதற்காக எத்தனை காலமாக முயற்சி செய்யப்பட்டு வருகின்றது? "ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு கூடாது" அதற்கு ஆதாரம் இல்லை என்றும் சொல்லாத பெரியார் யார்? ஆயினும் இதுவரை ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கின்றதா? ஒரு சிறிதும் காணப்படவில்லையே. இதற்கு ஏதாவது ஒருவழி செய்துதானே ஆகவேண்டும்? எனவே இதற்கு சரியானவழி அறிவினாலோ ஞானத்தினாலோ போதனையினாலோ ஏற்பட்டுவிடும் என்கின்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இது பெரிதும் இதுசமயம் அரசாங்க சட்டத்தினாலும், அரசியல் வகுப்புவாரி பிரதிநிதித்து வத்தினாலும் தான் இதை (அதாவது இந்த உயர்வு தாழ்வு வித்தியாசத்தை) ஒழிக்க முடியும்.

ஆனாலும் இது அரசியல் கூட்டமல்ல, இங்கு நான் அரசியலைப்பற்றிப் பேசப்போவதில்லை. அரசாங்கத்தில் நமது முன்னேற்றத்திற்கு பலவித சட்டம் வேண்டும் என்று கேட்பதுபோல எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்கின்றோம் இதையும் ஏன் வேண்டும் என்கின்றோம் என்றால் வலுத்தவன் இளைத்தவனை நசுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும், என்பதற்காகவேதான். இது சமுதாய சீர்திருத்தத்தின்பாற் பட்டதா இல்லையா என்பதை தாங்களே யோசித்துப்பாருங்கள். இன்னும் ஒரு அவசியமும் சொல்லுகின்றேன். அரசியல் காரர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கும்போது "எதற்காக வகுப்பு வித்தியாசத்தைக்கற்பிக்க வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக இருக்கலாமே" என்கின்றார்கள். இதை நம்பி இந்தப்படியே சமுதாய வாழ்க்கையில் இருக்கலாம் என்றாலோ மத இயல்காரர்கள் "அது மதத்திற்கு விரோதம்" என்கின்றார்கள் அம்மதத்தடையை நீக்க சட்டம் செய்யலாம் என்றாலோ "மத ஆச்சாரியர்கள்" "மதத்தில் சர்க்காரோ சட்டசபையோ பிரவேசிக்கக் கூடாது என்கின்றார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் ஒவ்வொரு வகுப்பும் தனித்தனியாய் பாடுபட்டு அதிகாரம் பெற்று ஆக வேண்டும் என்பதும் அதற்கு ஒவ்வொரு வகுப்புக்கும் பிரதிநிதித்துவ உரிமை அளிக்க வேண்டியது அவசியம் என்று சொல்லுவதும் சரி என்று தோன்ற வில்லையா? அடுத்தப்படியாக உங்கள் கவனத்திற்கு கொண்டுவருவது என்னவென்றால் ஜாதி வித்தியாசம் என்பதற்குள் தீண்டாமை என்பதாகும்.

## தீண்டாமை

கனவான்களே!

தீண்டாமை என்பதைப்பற்றி நான் ஏதாவது சொல்லவேண்டும் என்பதாக நீங்கள் யாவரும் எதிர்பார்க்கமாட்டீர்கள் என்றே கருதுகின்றேன் மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது, தெருவில் நடக்கக்கூடாது, கோயிலுக்குள் போகக்கூடாது, குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கின்றவைபோன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக்குழம்பால் எரிக்

காமலோ, சமுத்திரத்தால் மூழ்கச்செய்யாமலோ, பூமிப்பிளவில் அமிழச்செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்தபிறகுங்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும் சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவுசெய்துகொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தி தாழ்த்தப்பட்ட ஒரு பெரிய மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும், சாந்தத்தோடும், அஹிம்சா தர்மத்தோடும் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்பதும் இம்மாதிரியான மக்கள் இன்னமும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர்வாழ்வதை விட அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா என்பதும் எனக்கு விளங்கவில்லை.

இம்மாதிரி ஒரு பெரிய மனித சமூகத்தை கொடுமைப்படுத்தி அடைக்கிவைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நாடு சுயராஜ்யம் என்றோ, அரசியல் சுதந்திரம் என்றோ, பூரண விடுதலை என்றோ வாயினால் உச்சரிக்கவாவது யோக்கியதை உடையதாகுமா என்று கேட்கின்றேன். சிலர் "சுயராஜ்யம் வந்து விட்டால் பூரண சுயேச்சை வந்து விட்டால் இவைகள் ஒழிந்துபோகும்" என்று சமாதானம் சொல்லக்கூடும். அவர்களை நான் ஒன்று கேட்கின்றேன். சுயராஜ்யம் மட்டுமல்ல, "தர்ம ராஜ்யமும் அவதார ராஜ்யமும்" ஆகிய ராமராஜ்யமும்" "சத்திய சந்தன்" ராஜ்யமாகிய அரிச்சந்திர ராஜ்யமும், மற்றும் கடவுளே அரசாண்டதாகச்சொல்லும் அரசாட்சிகள் உள்ள காலத்தில்தானே இவைகள் உண்டாக்கப்பட்டதாகவும் இவற்றைச்சரிவர பரிபாலித்து வந்ததாகவும் இவை மகாக்கிரமமாக நடைபெற்று வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. எனவே மறுபடியும் அந்த ராஜ்யங்கள் வருமானால் இக்தக்கொடுமைகள் குறையுமா அதிகமாகுமா என்று கேட்கின்றேன். ஆதலால் இக்குற்றங்கள் நமது நாட்டைவிட்டு ஒழிக்க முயற்சிக்க வேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்கள் கடமை மாத்திரமல்லாமல் அரசியல் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்களுடையவும் முக்கியமான கடமையே யாகும்.

## கல்வி.

இனி கல்வி என்பதைப்பற்றியும் சீர்திருத்தக்காரர்கள் கவனம் செலுத்தவேண்டியது அதிகமுண்டு.

கல் என்பதற்கு அறி என்பது பொருள், கல்வி என்றால் அறிவித்தல் என்பதுதான் பொருளாயிருக்க வேண்டும். எனவே எதை அறிவிப்பது என்று கவனித்தால் உலக சுபாவத்தையும் மனிதத்தன்மையையும் அறிவிப்பதே கல்வியாகும் மற்றவைகள் வித்தையாகும் இதற்கு உதாரணமாக,

"ஒத்ததறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்"

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்"

என்ற வள்ளுவர் வாக்கே போதுமானது ஆதலால் உலக நிலையையும் அதற்கு தக்கபடி நடந்துகொள்ளத்தக்க மனிதத்தன்மையையுமே முக்கியமாய்க்கொண்டு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போதைய கல்வி என்பது மனிதத்தன்மைக்கும் அறிவுக்கும் சிறிதும் பொருத்தமானதல்ல. குடிகளிடத்தில் நம்பிக்கை இல்லாத ஒரு பொறுப்பற்ற அரசன் தனது பிரஜைகளை மூடர்களும் தேசத்துரோகிகளுமாக ஆக்கி தனது காலடியிலேயே அழுத்தி வைத்துக்கொண்டு நிரந்தரமாய் தன்னிச்சைப்படி ஆக்ஷி புரியவேண்டும் என்று கருதுகின்ற ஒரு அரசாங்கத்திற்கு அனுகூலமான கல்வியாகவே இருந்து வருகின்றது. அதுமாத்திரமல்லாமல் ஊரார் உழைப்பில் நோகாமல் வயிறுவளர்க்கக்கருதும் அயோக்கியர்களின் ஆதிக்கத்திற்கு அனுகூலமான கல்வியே அளிக்கப்பட்டு வருகின்றது

எனவே இவை அடியோடு மாற்றப்படவேண்டும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் கடவுள் பக்தி மதபக்தி இராஜ பக்தியாகிய அறிவுத்தடையும் அடிமைப்புத்தியும் கற்பிக்கக்கூடிய விஷயங்

செய்கிற ஒருவருக்கு, இரண்டு அல்லது மூன்று விசேஷ குணங்கள் அமையவேண்டும். அவ்வித குணங்கள் அமைந்தவர்கள் இத்தென்னிந்தியா முற்றிலும் தேடினாலும் நமது நாயக்கரைத்தவிர வேறு யாரையும் கண்டுபிடிக்க முடியாது. (கேளுங்கள். கேளுங்கள்.) அத்தகைய குணங்கள் எவை யெனில் முதலாவது தைரியம், இரண்டாவது தியாகம், மூன்றுவது தன்னுடைய வேலையை எவ்வாறு நடத்தி அனுபவத்திற்கு கொண்டுவருவது என்பது. திரு. ராமசாமி நாயக்கர் அவர்களின் தைரியத்தைப்பற்றி அதிகம் விஸ்தரிக்க வேண்டியதில்லை. அவர் ஒரு உண்மையான சிங்கம். சிங்கத்தின் ஹிருதயத்தைப்பெற்றிருக்கிறார். (கரகோஷம்) வாழ்க்கையில் பயம் என்பது அவருக்கு இன்னதென்றே தெரியாது. அத்தகைய பயமின்மை இருந்தாலொழிய இத்தகைய காரியங்களில் யாரும் வேலை செய்ய முடியாது.

அவசியம் நேர்ந்தால் அவர் எவ்விததியாகமும் செய்யத்தயாராயிருக்கிறவர். வசிக்கவேண்டு மென்பதை நான்முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

பழையகாலத்து வீரர்கள் தங்கள் ஆயுதத்தை உபயோகித்ததுபோல் திரு நாயக்கர் தனது பேனுவை பயமின்றி எங்கும் செலுத்துகிறவர். ஆகவே அப்பேர்ப்பட்டவர் இம்மகாநாட்டுக்கு தலைமை திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். எம். எல் சி. திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர்.

எத்தகைய சமூக ஊழியம் நாயக்கர் அவர்கள் செய்திருக்கிறார் எனப்பேச முயல்வது பைத்தியக்காரத்தனமாகும். திரு நாய்க்கர் அவர்கள் கபடமற்றவர். மனதில் நினைப்பதைப்பேசியும், பேசியவாறே செய்தும் காட்டுபவர். இத்தகைய பெருந்தலைவரைத் தேர்ந்தெடுத்ததற்காக எல்லோரையும் பாராட்டுகின்றேன்.

## சென்னை கார்ப்பரேஷன் தலைவர்.

கனம் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் பி. ஏ. பி. எல்.

மகா-ா-ஸ்ரீ தலைவர் அவர்களே சீமாட்டிகளே, சீமான்களே! இத்தீர்மானத்தை ஆதரிக்கும்படி என்னைக்கேட்டுக்கொள்ளப்படும் என்று நான் நினைக்க வில்லை. ஏனெனில் இத்தீர்மானத்

திற்கு ஆமோதிப்பு அவசியமில்லை. ஆனால் கடந்த 40 வருஷகாலமாக இடைவிடாத சேவை செய்து வரும் எனது நண்பர் திரு. நாய்க்கர் அவர்களின் ஊழியத்தைப்பாராட்டிப்பேச ஒரு அரிய சந்தர்ப்பத்தையளித்த இம்மகாநாட்டு பெருந்தன்மைக்கு மகிழ்வெய்துகிறேன். தமிழ் நாட்டில் திரு. ராமசாமிநாய்க்கர் அவர்களின் பெயர் எந்த வீட்டிலும் சொந்தப்பெயராகவே உச்சரிக்கப்படுகின்றது. அஃதன்றி அவரது புகழ் ஆந்திரதேசம், பம்பாய், மத்திய மாகாணங்களுக்கும் பரவியிருக்கிறது. (கரகோஷம்) தமிழ் பரவிய எல்லாவிடங்களிலும் எங்குபார்த்தாலும் அவரது பேச்சாகவே இருந்துவருவதற்கு அவரது எழுத்திலோ அல்லது பேச்சிலோ ஏதாவது ஒரு விசேஷ மிருக்கவேண்டும். இவ்வளவு பிரக்யாதியடைய மற்ற சமூக சீர்திருத்தக்காரர்கள் செய்யாத வேலையை இவர் என்ன செய்து இருக்கிறார் என்பதை யோசிப்போம். சுமார் 25 வருஷங்களுக்கு முன் சமூகசீர்திருத்தம் தேசீய முறையில் செய்வதா அல்லது ஆராய்ச்சி முறையில் செய்வதா என்று நாங்கள் தர்க்கித்த நினைவு எனக்கு இருக்கின்றது. அதை நினைக்கும் போது அப்போதைய நிலைக்கும் இன்று திரு. நாயக்கரால் சாமானிய ஜனங்கள் அடைந்திருக்கும் அறிவு வளர்ச்சிக்கும் வித்யாசம் தெரிகிறது. சீர்திருத்தத்திற்கு அக்காலத்தில் நாங்கள் பெரிதும் படித்த கூட்டத்தாரையே நம்பியிருந்தோம். ஆனால் திரு நாயக்கர் அவர்களைப் பொருட்படுத்தவேயில்லை. சீர்திருத்தமடைய விரும்பாத எவரிடமும் சீர்திருத்தத்தை அவர் புகுத்த விரும்புவதில்லை ஆனால் அவர் தன்னுடைய முழு சக்தியையும் படிப்பில்லாத, பாமர மக்களிடம் செலுத்தியும் அவர்களது மனோ உணர்ச்சியை கிளப்பிவிட்டுப் வேலை செய்து வருவதே அவரது வெற்றிக்குக்காரணம். மூட நம்பிக்கையில் ஆழ்ந்து. அவதிப்பட்டுக்கிடந்த ஜனங்களுக்கு தெளிவைக்கொடுத்ததன்றி அவர்களது மனோ நிலையையும் மாற்றியதே அவரது வெற்றியின் இரகசியமாகும். இதைவிட கண்ணியமானது வேறென்ன விஷயங்களை எடுத்துச்சொல்லி சாமானிய மக்களை அறிந்து கொள்ளச்செய்வதை விட சுயராஜ்யபாதை வேறென்ன விருக்கிறது. இவ்வழிகளால் தாங்களே காரணகாரியங்களறிந்து ஒரு முடிவுக்கும் வர ஏதுவாகிறது. இது தான் சமூக சீர்திருத்

தத்துறையில் திரு ராமசாமி நாயக்கருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசமும் ராமசாமி நாய்க்கர் அவர்கள் செய்திருக்கும் மகத்தான சேவையுமாகும்

எவருடைய உணர்ச்சியும் பாதிக்கப்படுமேயென்று அவர் சிறிதும் கவலை கொள்வதே கிடையாது. அனால் அவர் எந்த விஷயத்தையும் காரணகாரியத்தோடு ஆராய்ச்சி செய்வதில் தவறுவதே கிடையாது. ஒவ்வொருவரும் சென்னை மாகாணத்திலேயே வாலிபர்களிடமும் வயோதிகர்களிடமும் திரு நாயக்கர் ஒரு புதிய மனோவெழிச்சியை உண்டாக்கியிருக்கிறார். தேசக்ஷேமத்தில் கருத்துக் கொண்ட ஒவ்வொரு வரும் அவருக்கு வந்தனத்தை செலுத்துவதோடு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளார்கள். ஆகையால் இத்தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

## டாக்டர் பி. சுப்பராயன்.

சென்னை அரசாங்க முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஷை தீர்மானத்தை ஆதரித்துப்பேசியதாவது:—

நான் காங்கரசிலிருந்த காலம் முதற்கொண்டு நாயக்கர் அவர்களை அறிவேன். அவர் மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படுமென்பதைக் கொஞ்சமும் மதியாது தான் சரியென்றெண்ணியதையே வற்புறுத்தி வந்த ஒரு காரணத்தாலேயே அவரிடம் நான் மாறாத அன்பு கொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே இப்போது நமது மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது. நமமால் கறபிக்கப்பட்ட மனிதனுக்கு மனிதன் உள்ள வேற்றுமையே நாம், நமது தேசத்தை ஆள்வதற்கு தகுதியற்றவர்களாகச் செய்திருக்கிறது. சுயராஜ்யம் கேட்பதால் வராது. ஆனால் நாம் அதற்கு தகுதியுடையவர்களாகச்செய்து கொள்ள வேண்டும். (கரகோஷம்) அந்த அர்த்தத்தோடுதான் இன்று நாயக்கர் அவர்கள் பிராமணரல்லாதாரியக்கத்தின் தலைவராய் விளங்குகிறார். இந்த இயக்கத்தின் முக்கிய அம்சத்தை அவர் அறிந்து விட்டார். காலஞ்சென்ற எனது நண்பர் நாயர் பெருமான் இவ்வியக்கத்தை துவக்கும்போது சமூக சீர்திருத்தத்தையே குறி

கொண்டிருந்தார். அத்தகைய கொள்கையையே திரு நாயக்கர் அவர்களும் கொண்டிருக்கிறார் இத்தகையோரே நீங்கள் செய்யப் போகும் காகிதத்தீர்மானங்களை கிரியாம்சையில் காட்டக்கூடியவர்கள். இளைஞர்கள் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் மட்டும் கவனம்செலுத்தாமல் ஊர், ஊராகச்சென்று அதையே பிரசாரம் செய்ய வேண்டுமென விரும்புகின்றேன். இம்மகாநாட்டிற்கு நாயக்கர் அவர்கள் தலைமைவகிக்கும்படி கொண்டுவந்த தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

திரு. என். சிவராஜ் அவர்கள் பி. ஏ. பி. எல். எம். எல். சி.

நாயக்கர் அவர்களுடைய சேவையைப்புகழ்ந்து பேசியதன்றி தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக செய்துவரும் முயற்சிகளைப்புகழ்ந்து பேசினார்.

## ரெவரண்ட் ஜான் பிட்மன்.

சமூக சீர்திருத்தத்துறையில் இடைவிடாத சேவை செய்து வரும் நாயக்கர் அவர்கள் தென்னிந்தியாவிலேயே ஓர் இளைஞர் என்று பேசினார்.

## முடிவுரைப் பிரசங்கம்.

சகோதரர்களே! சகோதரிகளே!

நமது மகாநாட்டின் நடவடிக்கைகள் எல்லாம் அநேகமாய் முடிவு பெற்றுவிட்டன. மகாநாடுகளின் வழக்கப்படி பார்த்தால் மகாநாட்டு தலைவர் என்கின்ற முறையில் எனது முடிவுரை என்பதாக சில வார்த்தைகளையாவது நான் சொல்லியாகவேண்டும். நீங்களும் அதைக்குறிப்பாய் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை உணருகிறேன். மகாநாட்டு நடவடிக்கைகளின் ஆதி முதல் இதுவரை ஊக்கத்தோடும் உணர்ச்சியோடும் இடையறுக்கவனத்தோடும் கலந்திருந்த உங்களுக்கு இனி நான் அதிகமாய் ஒன்றையும் சொல்ல வேண்டியதில்லை யென்றே நினைக்கின்றேன். ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே சீர்திருத்தம் என்பதைப்பற்றி பேசப்பட்டு வரு

கிறதாய் அறியக்கிடக்கின்றது. எவ்வித சீர்திருத்தத்தைப்பற்றி இதுவரை பேசப்பட்டு வந்ததாய் அறியக்கிடக்கின்றதோ, எவ்வித சீர்திருத்தத்தைப்பற்றி இப்போதும் பேசப்பட்டு வருகிறதோ அவற்றில் ஒரு சிறிதும்காரியத்தில் வெற்றிபெறவேயில்லை.

சீர்திருத்தக்காரர்களும் தங்கள் சீர்திருத்தங்களைப்பற்றி வாயளவில் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்களேயொழிய காரியத்தில் கொண்டுவருவதில் வெற்றியடையவே இல்லை. ஆனாலும் இப்போதும் அம்மாதிரியாகவேதான் வாய்ப்பேச்சிலும் வெறும் தீர்மானத்திலும் சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றனவேயொழிய காரியத்தில் நடைபெறச்செய்யும் மார்க்கத்திற்கு கொண்டுபோய் விடும்படியான சீர்திருத்தம் செய்வதற்கு ஆட்களைக்காணோம்.

இந்தமாதிரியான வாய்ப்பேச்சு சீர்திருத்தத்திற்கும் எதிர்ப்புச்சீர்திருத்தங்கள் வெளிப்படையாயும் மறைமுகமாயும் சூட்சியாயும் நடந்துகொண்டே வந்திருக்கின்றன. இன்றைய தினமும் பல இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றுதான் அரசியல் இயக்கம் என்பதும் திரு காந்தியின் வருணாச்சிரமப் பிரசாரம் என்பதும், மற்றும் வருணாசிரம தர்ம பரிபாலன மகாநாடு, பிராமண மகாநாடு, இந்துமகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, சைவசித்தாந்த மகாநாடு, வைணவ சித்தாந்த மகாநாடு ஆஸ்திகர்கள் மகாநாடு என்று சொல்லப்படுபவைகள் போன்றவைகளும், ராமாயணம், பாரதம், பாகவதம் பெரிய புராணம். திருவிளையாடல் புராணம் முதலிய புராண இதிகாச காலக்ஷேபங்களும், வேத சாஸ்திரம் தேவாரம் பாடசாலைகள் முதலியவைகளும், இவைகளுக்கு அடிக்கடி பாஷியங்கள் கிளப்புவதும் முதலியவைகளுமாகும்.

ஆதலால் வெறும் சீர்திருத்தங்கள் எப்பேர்ப்பட்ட வீரர்களால் செய்யப்படினும் அவைகளை மேற்கண்ட நரையான்கள் அடிபோடு அழித்துக்கொண்டே தான்வந்து விடுமேயொழிய ஒரு சிறு பாகத்தையும் மீதியிருக்க விடாது என்பதை தயவுசெய்து உணருங்கள். உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்

புபவர்கள் முதலில் மேற்கண்ட புல்லுருவிகளையும் களையான்களையும் அழிக்க தைரியமாய் முற்படவேண்டும். பழக்கம் வழக்கம் என்கின்ற பிசாசுகளை முதலில் ஓட்டிவிடவேண்டும். பழக்க வழக்கங்களை விடவேண்டுமானல் மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக்கொடுக்க தயாராயிருக்கவேண்டும். அப்படி பகுத்தறிவுக்கு மதிப்புகொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. எழுதிவைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. வெகுகாலமாக நடந்துவருவதாகத்தெரியவருவதினாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. அநேகர் பின்பற்றுவதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே ஒன்றை நப்பிவிடக்கூடாது. எதாவதொரு விஷயம் நம்முடையபுத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதை தெய்வீகம் என்றோ மந்திரசக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவிற்கு தாராளமாய் விட்டு ஆலோசிக்கத்தயாராயிருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்கமுடியும்.

அப்படிக்கில்லாமல் எதையும் "நம்பித்தானகவேண்டும்" "பெரியவர்கள் நடந்தபடித்தான் நடக்கவேண்டும்" என்று நினைப்போமானல் எதை நம்புவது? யார்சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்த புஸ்தகம் கடவுள் சொன்னது? அதில் எதெது மத்தியில் மனிதனல் நுழைக்கப்பட்டது? அவைகளில் அறிவாளிக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமர மக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார்? என்கின்றவைபோன்ற சங்கைகளுக்கு தெளிவு எங்கே இருக்கிறது? நமது சீர்திருத்த வேலையின் ஜீவநாடி இந்த இடத்தில் தான் இருக்கிறது. இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயு மிருக்கவேண்டும்.

தவிர சீர்திருத்தங்களைப்பற்றி பிரசாரம் செய்வதன் மூலம் மக்களுக்கு எடுத்துச்சொல்லி மேற்கண்ட முழுவதையும் சரிப்படுத்திவிடலாம்என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக்காரத்தனமாகும்.

ஏனெனில் நமது பிரசாரத்தை செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப்பத்தைக்காட்டிலும் நமது சீர்திருத்தத்திற்கு எதிரிகளான வைதீகர்கள், பண்டிதர்கள் சுயநலப் பார்ப்பனர்கள், அவர்களது கூலிகள் ஆகியவர்களுக்கே மிகுதியும் சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் அதிகமாய் இருக்கின்றன, எப்படியெனில் கோவில்கள், புராணங்கள் சித்திரப்படங்கள் ஆகியவைகளும் அவைகளின் பண்டிகை உற்சவம், காலக்ஷேபம், பஜனை ஆகியவைகளும் பழக்கம், வழக்கம், நடை, உடை, பாவனை, சப்பிரதாயம் ஆகியவைகளும், பள்ளிக்கூடம், படிப்பு, பாடபுஸ்தகம் முதலியவைகளும் அகியவைகளின் மூலம் யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷயங்கள் புகுத்தப்பட்டுவிடுகின்றன. இது தவிர கோடிக்கணக்கான ரூபாய்கள் வருவாய் கொண்ட மடங்களும் மடாதிபதிகளும் ஸ்தாபனங்களும் வெட்டி ஆட்களும் இருக்கின்றன

அன்றியும் ஜனப்பிரதி நிதித்துவமான ஓட்டுகள் பெற்று அதன் மூலம் பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து அவர்களால் சட்டங்கள் செய்து முழு சீர்திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில் ஜனப்பிரதி நிதித்துவமான ஓட்டுகள் என்பது பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றது. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த விரோதிகளுக்கு பயந்தவர்களும் சரியான சீர்திருத்த அறிவில்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.

சர்க்காரும் நம்முடைய இந்தகேவல நிலையினால் வாழவேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். ஆதலால் உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால் ஏக சக்ராதிபத்தியத்தன்மைகொண்ட ஒரு வீரனின் ஆட்சியால் தான் முடியும் அதாவது "இந்தப்பொதுக் கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு" என்று விளம்பரம் செய்யவேண்டும். யாராவது ஆக்ஷேபித்தால் அவர்களை சிறையிலிடவேண்டும். இதை பொதுஜனங்கள் கூட்டம் போட்டு கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே அக்கோவிலை இடித்தெறிந்துவிடவேண்டும்.

ஜாதி வித்தியாசமோ உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புஸ்தகங்களைப்படிக்கக்கூடாது என்று சொல்லிவிட வேண்டும். மீறிபடிக்க ஆரம்பித்தால் அவற்றை பறிமுதல் செய்யவேண்டும். உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவைகொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிடவேண்டும். பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளை தீவாந்திரத்திற்கு அனுப்பிவிட வேண்டும். சுவாமிகளுக்கு உள்ள நகைகள் வாகனங்கள் பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்று படிப்பில்லாதவர்களுக்கு படிப்பும் தொழில் இல்லாதவர்களுக்கு தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப்படுத்திவிட வேண்டும்.

இதுபோன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டைக்கொண்டு வரவேண்டும். அப்பேர்ப்பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடுகள் தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்தமும் பொலிந்து விளங்குகின்றன.

இப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக்கொண்டுவர வேண்டுமானால் அநேக சீர்திருத்தக்காரர்கள் உயிர்துறக்கத்தயாராயிருந்துகொண்டு பாமரமக்களிடையில் உண்மையைப்பரப்ப முன்வரவேண்டும். நம்நாட்டுப்பாப்பனர்கள் நம் சீர்திருத்தங்களை எதிர்க்க வெளியில் வருவதில்லை. ஒரு விதத்தில் இப்போது அவர்கள் ஒளிந்துகொண்டார்கள். ஆனாலும் நம்மவர்களிலேயே சில கூலிகளையும் ஏமாந்தசோணகிரிகளையும் பிடித்து அவர்களை நம்மீது ஏவிவிட்டு தடைவேலை செய்யச்செய்துவிட்டு தங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் செய்துகொள்ள வர்ணாசிரம தர்ம மகாநாடு, ஆரிய தர்மபரிபாலன மகாநாடு, பிராமணர்கள் மகாசபை, சநாதன தர்மிகள் மகாநாடு வேதவித்துக்கள் மகாநாடு, புரோகிதர்கள் மகாநாடு, பண்டிதர்கள் சாஸ்திரிகள் கனபாடிகள் சம்மேளனம் ஆகிய பல மகாநாடுகள் திருட்டுத்தனமாகவும் சூட்சியாகவும் கூட்டி அதற்குள் பல இரகசியத்தீர்மானங்கள் செய்து இரகசிய சமாச்சாரப் போக்குவரத்து மூலம் தெரிவித்துக்கொண்டு கட்டுப்பாடாய் வேலைசெய்து வருகிறார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு சீர்திருத்த இயக்கத்திற்கு நாஸ்திக இயக்கம் என்ற பெயரைக்கொடுத்து அதற்குப் பலதப்பர்த்தங்களையும் பழிப்புகளையும் கற்பித்தும் வருகிறார்கள். இதை சில பார்ப்பனரல்லாதார்களும் நம்பிக்கொண்டு அர்த்தமில்லாமல் குற்றம் சொல்லுகின்றார்கள். ஆனாலும் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் நாஸ்திகம் என்கின்ற பூச்சாண்டிக்குப்பயப்படக்கூடாது. அது ஒரு அர்த்தமற்ற வார்த்தை. அதன் உண்மை அர்த்தமும் உண்மைப்பிரயோகமும் என்னவென்றால் "பார்ப்பனீயத்தில் அதாவது பார்ப்பனர்களுடைய வேதம் சாஸ்திரம் இதிகாசம் புராணம் ஆகியவைகளில் நம்பிக்கையில்லாதவன், பார்ப்பனர்களின் புரட்டுகளைக்கண்டுபிடித்து வெளிப்படுகின்றவன்" என்பதுதான். இந்நிலையில் நாம் எல்லோரும் நல்ல உறுதியான நாஸ்திகர்களே ஆவோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தைரியமாய் நம்மை நாஸ்திகர் என்றே சொல்லிக்கொள்ள வேண்டும். சீர்திருத்தக்காரர்கள் தங்களுடைய பெயரின் இறுதியில் நாஸ்திகன் என்ற பட்டத்தையே சேர்த்துக்கொள்ளவேண்டும். அப்போது தான் நாஸ்திகப்பூச்சாண்டியை கொல்லமுடியும்.

நமக்கும் வேதத்திற்கும் என்ன சம்மந்தம்? அதை யார் உண்டாக்கினவர்கள்? யாருக்காக உண்டாக்கப்பட்டது? எப்போ என்ன பாஷையில் செய்யப்பட்டது? அதில் நமது நிலைமை என்ன? என்பவைகளாகிய விஷயங்களை யோசித்துப்பார்த்தால் அதை நம்பலாமா? நாம் ஒப்புக்கொள்ளலாமா? அது நமது மக்களிடை பரவுவதற்கோ இருப்பதற்கோ இடம் கொடுக்கலாமா? என்பவைகள் விளங்கும்.

கடைசியாக சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன்.

மதவெறியும் சமயவெறியும் பிடித்தவர்களும் பொதுவாக பார்ப்பனர்களும் சமத்துவம் சுதந்திரம் சுயமரியாதை பகுத்தறிவு ஆகியவைகள் கொண்ட சீர்திருத்தத்திற்கு எப்போதுமே விரோதிகள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒருவர் "எங்கள் மதத்தில் மேற்கண்ட சீர்திருத்த முண்டு" என்பார் "ஆனல்

எங்களைப்போல் வேஷம் போட்டுக்கொள்ளவேண்டும், எங்கள் வேதத்தை நம்பவேண்டும், எங்கள் சாமியையும் தூதனையும் வணங்கவேண்டும்'' என்று சொல்லுவார்கள். மற்றொருவர் "எங்கள் சமயத்தில் சீர்திருத்தம் உண்டு, ஆனால் எங்களைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு எங்கள் சாமிகளையும் புராணங்களையும் நம்பவேண்டும்'' என்பார்கள் நம்பாவிட்டால் "நாஸ்திகர், அஞ்ஞானி, பாவிகள்'' சமயத்துவேஷி என்று சொல்லிவிடுவார்கள் இவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள் என்பதையும் இவர்கள் உண்மை சீர்திருத்தத்திற்கு விரோதிகள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

முக்கிய எச்சரிக்கை என்னவென்றால், பார்ப்பனர்களில் சிலர் சீர்திருத்தக்காரர்கள் என்று கலபத்தில் பட்டம்பெற்று புறப்பட்டுவிடுவார்கள். அதாவது கள்ளும் சாராயமும் குடித்தால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆய்விடுவார், ஒருவர் ஆடு மாடு பன்றி சாப்பிட்டால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார், மற்றொருவர் வெட்டிச்சோறாக யார் வீட்டிலும் கிடைத்ததையெல்லாம் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார், மற்றொருவர் 'ஒழுக்கமில்லாமல் யாரையும் எந்தப்பெண்ணையும் கல்யாணமாகவோ வைப்பாட்டியாகவே வேசியாகவோ அனுபவித்துக்கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்கார ராகிவிடுவார். ஜனங்களும் முட்டாள்தனமாக அவர்களை வித்தியாசமற்றவரென்றும் சீர்திருத்தக்காரரென்றும் நம்பிவிடுவார்கள். ஆனால் அவர்களால் சீர்திருத்தத்திற்கு மாத்திரமன்றியில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெரிய ஆபத்து என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

மற்றும் எந்த விஷயத்திற்கும் சாமியையும் மதத்தையும் குறுக்கே கொண்டுவந்து போட்டுவிடுகின்றார்கள். ஆகவே உங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக எந்த மதமாவது கடவுளாவது குறுக்கிட்டால் அவற்றைத் தைரியமாக எதிர்க்கவேண்டுமென்றே கேட்டுக்கொள்ளுகின்றேன். பார்ப்பனர்கள் ஜாதிவித்

தியாசம் காட்டுவதுடன் பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளும் பற் பல ஜாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். "மேல் ஜாதியார்களே" நீங்கள் உங்களுக்கு சமமாக இருக்கவேண்டு மென்று விரும்புவீர்களானுல் உங்களுக்குக் 'கீழேயுள்ள ஜாதியார்' களுக்கும் நீங்கள் சமத்துவம் அளிக்கவேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை பார்ப்பனர்கள் காட்டும் கொடுமைகளை விட சற்று அதி சம் என்றே சொல்லவேண்டும். ஆனுல், நாம் பார்ப்பனர்களை ஏன் அதிகமாகச்சொல்லுகின்ருேமென்ருல், அவர்கள் வைத்த தீ தான் நம்முடைய வீடுகளிலும் பிடித்துக்கொண்டது. நாம் மேல்ஜாதி என்பாரோடு சண்டை செய்து வகுப்புவாரிப் பிரதிநிதி த்துவப்படி உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற்ருல் கீழ் ஜாதியார்களென சொல்லப்படுகிறவர்களுக் கும் அவர்களுக்குரிய பங்கை நாம் கொடுக்கவேண்டும். சர்வகட்சி மகாநாட்டுத்திட்டத்தில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடு க்கவேண்டுமென்ற விஷயமேகாணப்படவில்லை. பார்ப்பனர்களுக் குப்பயந்தே எல்லோரும் அதில் கையெழுத்துப்போட்டு விடுகிருர் கள். முதலில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுப்பதை விட வேறு என்ன சீர்திருத்தம் வேண்டுமென்று நினைக்கின்றீர்கள். பிச்சை எடுப்பதற்கு உபயோகமாயிருக்கும் வேதப்படிப்பிற்காக கொள்ளை கொள்ளையாக லாபம் சம்பாதிக்கும் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் சோறும் போட்டு படிக்கும்படி செய்கிருர்கள். இம்மாதிரியான உதவி ஆதிதிராவிட பிள்ளைகளுக்கு அளிக்கப்படு மானுல், அவர்களில் வயிற்றுப்பிழைப்பிற்கு வழியின்றி சிறு வய திலேயே கூலிக்குச்செல்லும் எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக் கூடம் சென்று படித்து மந்திரி வேலைக்குத்தயாராக விருக்கமாட் டார்களா என்பதை நினைத்துப்பாருங்கள்.

இனி சிலர், வேதங்களும், புராணங்களும் பழங்கதையென்று சொல்லிக்கொண்டு பண்டிகை திதி திவசம் கிரகணம் ஆகியவை கள் வரும்போது அவர்கள் அப்புத்தகங்களையே முதலில் திறந்து பார்ப்பார்கள். ஆனுல் அவர்களைக்கேட்டால் வழக்கத்துக்கு விரோதமாக நடக்கலாமாவென்று கூறுகிருர்கள்; இவர்களை எந் தக்கூட்டத்தில் சேர்ப்பது

கடைசியாக சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கங்கள் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும் ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும் சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே வேண்டும். ஆகையால் நீங்களெல்லோரும் இம்மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை தைரியமாக நடத்தையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

பாஞ்சால சிங்கமாகிய லால லஜபதிராய் அவர்கள் காலமானதற்கு இம்மாகாநாடு தனது ஆழ்ந்த துக்கத்தை தெரிவித்துக் கொள்வதுடன் இவ்விஷயத்தை அவர்களுடைய குடும்பத்தாருக்குத்தெரிவிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

2. மக்கள் பிறவியிலும் ஆண் பெண் என்கின்ற தன்மையிலும் உயர்வு தாழ்வு என்கின்ற வித்தியாசங்கள் கண்டிப்பாய் ஒழிக்கப்படவேண்டுமென்று இம்மாகாநாடு தீர்மானிக்கின்றது.

(ஏ) குடும்பச்சொத்தில் பெண்களுக்கு ஆண்களைப்போலவே சம உரிமை அளிக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(பி) புருஷன் மரணமடைந்து விட்டால் அவன் சொத்து முழுமையும் பெண்ஜாதிக்கு சர்வ சுதந்திரமாய் அனுபவித்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(ஸி) பாகப் பிரியாத குடும்பங்களில் கணவன் இறந்துபோனால் அக்கணவனுக்கு உள்ள சகல உரிமைகளும் சொத்துக்களும் அவனது மனைவிக்கு சர்வ சுதந்தரமாய் அனுபவித்துக்கொள்ள உரிமை அளிக்கப்படவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(3) எல்லாப்பொதுப் பள்ளிக்கூடங்களிலும் ஆண் பெண் என்கின்ற வித்தியாச மில்லாமலும் உயர்வு தாழ்வு என்கின்ற

வித்தியாச மில்லாமலும் கட்டாயப்படிப்பு கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(ஏ) தாழ்த்தப்பட்ட மக்கள் (அதாவது தீண்டாதார்) என்கின்றவர்களுக்கு இலவசக் கட்டாயக்கல்விக் கற்பிப்பதில் அவர்களுக்கு இலவசச்சாப்பாடு போட்டு, புஸ்தகம் முதலிய கல்விச்சாதனங்களும் இலவசமாய் அளிக்கப்படவேண்டும் என்று இம்மகாநாடு பலமாய் தீர்மானிக்கின்றது.

4 பொதுப்பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் குருட்டு நம்பிக்கையும், மூடபக்தியும் கொண்ட மத விஷயங்களையும் புராணக்கதைகளையும் கற்பிக்க அனுமதிக்கக்கூடாது என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

தாய்ப்பாஷைகளுக்கு என்று பண்டிதர்களை உற்பத்தி செய்யும் பள்ளிக்கூடங்களின் பாடங்களில் குருட்டு நம்பிக்கையும் மூடபக்தியும் கற்பிக்க ஆதாரமான சாஸ்திரம், புராணம் முதலானவைகளைப்பாடமாக வைக்காமல் பெரிதும் அறிவு வளர்ச்சியையும் இயற்கைத்தத்துவத்தையும் போதிக்க கூடிய விஷயங்களைப்பாடமாக வைத்து பரீக்ஷிக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்றது.

பள்ளிக்கூடங்களில் தாய் பாஷை கற்பிக்க என்று ஏற்படுத்தும் உபாத்தியாயர்களுக்குப்பெரிதும் புராணங்களில் உள்ள அறிவையே பிரதானமாகக்கருதாமல் கூடுமானவரை இயற்கைத்தத்துவமும் விஞ்ஞான அறிவும் சரித்திர ஆராய்ச்சியும் உள்ள இலக்கண இலக்கிய பண்டிதர்களாக நியமனம் செய்ய வேண்டும் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பதற்காக என்று அனுமதிக்கும் பாடபுஸ்தகங்களில் குழந்தைகளை குருட்டு நம்பிக்கையிலும் மூடபக்தியிலும் கொண்டுபோய்விட்டு அறிவின் வளர்ச்சியையும் தன் நம்பிக்கையையும் தடை செய்யும்படியான எந்த விதமான விஷயத்தையும் பாடபுஸ்தகமாக அனுமதிக்க கூடாது என்றும் முற்றிலும் அறிவையும் ஒழுக்கத்தையும்

கற்பிக்கக்கூடிய விஷயங்களையே முக்கியமானதாகக்கொண்ட தத்துவத்தையே கற்பிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும் என்றும் இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

கோவிலுக்குள் போக தடைப்படுத்தப்பட்டவர்களுக்கு சம உரிமை நியாயம் கிடைப்பதற்கு இடையூறாயுள்ள தடைகளை எல்லாம் நீக்கவும், கோவில்களின் உட்புறத்தில் உள்ள படிப்படியான வித்தியாசங்களை விலக்கவும் தீவிர முயற்சி செய்யவேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது

பல்கலைக்கழகமாகிய யூனிவர்சிட்டியில் பாஷை வித்தியாசம் இருக்கக்கூடாது என்று நாட்டுத் தாய்மொழிக்கல்விக்குத் தாராளமான உதவி செய்யச் செய்யவேண்டு மென்று இபமகாநாடு தீர்மானிக்கிறது.

ஆங்கில துரைத்தனத்தாரும், இந்திய மன்னர் துரைத்தனத்தாரும், ஸ்தலஸ்தாபன நகராண்மைஸ்தாபனங்களும் முக்கியமான இடங்களில் எல்லாம் மருத்துவத்திற்கும் குழந்தைகள் பாதுகாப்புக்கும் இல்லங்கள் அமைக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

ஒவ்வொரு மதத்தினரும் பிறமதத்தினருடன் ஒத்துவாழ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றது.

## சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு.

(குடிஅரசு 2-12-28.)

தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு சென்னை விக்டோரியா மண்டபத்தில் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமையில் நடந்தேறிய விபரமும் தலைவர் உபந்யாசமும் மற்றும் பல விபரங்களும் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்களும் இத்துடன் வரும் அநுபந்தத்தில் காணலாம்.

அக்கிராசன உபந்யாசத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் சீர்திருத்தக்காரர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்களும், சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய விஷயங்களும், செய்யவேண்டிய முறைகளும், தெளிவாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, அக்கிராசனர், தாம் சீர்திருத்தத்தில் நம்பிக்கை யுடையவரல்ல வென்றும், அழிவு வேலையிலேயே நம்பிக்கையுடையவரென்றும், அதாவது ஒன்றைமாற்றியோ அல்லது யெடுத்து விட்டோ அந்த ஸ்தானத்தில் மற்றொன்றை வைக்க வேண்டுமென்கிற விஷயத்தில் கவலையில்லாதவரென்றும், அவசியமில்லாததும் கொடுமை விளைவிப்பதுமான விஷயங்களை அழித்து விட வேண்டியது என்கின்ற கருத்தின் பேரில் கவலை கொண்டிருக்கும் அழிவு வேலைக்காரரென்றும் சொல்லியிருக்கிறார்.

அதற்கேற்ப இப்போது சமுதாய முற்போக்குக்கும் சமத்துவத்திற்கும் விடுதலைக்கும் புதிதாக நாம் கைக்கொள்ள வேண்டியது என்ன வென்றால், அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் தடையாய் இருப்பவைகளை அழித்துவிட வேண்டுமென்பதேயாகும். இவ்விதம் அழிவு வேலை மூலம் தடைகளை நீக்கி விட்டால் தானாகவே முற்போக்குக்கு சரியானபாதை ஏற்பட்டுவிடும் என்பது அதில் நன்றாய் அறியக்கிடக்கிறது. இந்தக் குறிப்பானது "இருப்பதை எடுத்துவிட்டால் வேறொன்று வேண்டாமா?" என்று ஆலோசனை இல்லாமல் பிதற்றிக்கொண்டிருக்கின்ற விதண்டாவாதிகளுக்கும் பாமர மக்களை ஏய்ப்பதற்குச் சில சுயநலவாதிகள் "நாயக்கர் எல்லா வற்றையும் அடியோடு அழிக்க வேண்டுமென்கிறாரே, அப்படி அழித்து விட்டால் மக்களுக்கு வேறு கதியென்ன?" என்று நீலிக்கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் பாஷாண்டிகளுக்கும் தக்க பதிலாகும்.

மற்றும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் நடந்து வந்த சீர்திருத்தங்கள் பலிக்காமல் தடைப்பட்டுப் போனதற்குக் காரணம், மேல் குறிப்பிட்டதான தடைகளாயிருப்பவைகளை

சரியானபடி வேருடன் களைந்தெறிவதான அழிவு வேலை செய்யாததுதான் காரணம் என்றும், தற்காலத்தில் செய்யப்படுவதாய்ச் சொல்லப்படுவதெல்லாம் புரட்டும் சுயநலமும் அடிப்படையாய்க்கொண்டதென்றும், சீர்திருத்தத்திற்கு விரோதிகளாய் உள்ள உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களாலும் "சித்தாந்தக்காரர்" களாலுமே நடைபெற்று வந்ததென்றும் தெளிவாய் எடுத்துக்கூறியிருப்பதிலிருந்து நமது நாடு உண்மையான சீர்திருத்தமடையாமல் போனதற்குக் காரணம் விளங்கும். மற்றும்,

"கபிலரை ஏமாற்றி விட்டோம், புத்தரை ஏமாற்றி விட்டோம், கூன்பாண்டியனை ஏமாற்றி விட்டோம், மூவேந்தர்களை அழித்து விட்டோம், மகமதிய அரசாங்கத்தை ஒழித்து விட்டோம், நாயக்கர் அரசாங்கத்தை பாழ்படுத்தி விட்டோம், கம்பனைக்கொண்டே எங்களைக் கடவுளாகவும் தேவர்களாகவும் செய்து கொண்டோம். இப்படிப்பட்ட எங்களுக்கு சில பாப்பனரல்லாத கூலிகளைப்பிடித்தே இப்புதிய சீர்திருத்த இயக்கத்தை ஒழித்து எங்கள் ஆதிக்கத்தை பழையபடி நிலைநிறுத்திக்கொள்ளச் செய்வது தானா ஒரு பிரமாதமான காரியம்" என்று மனப்பால் குடித்துக் கொண்டு இறுமாந்து ஆணவமாய் பிதற்றித் திரிபவர்களுக்கு, அக்கிராசனர் உபந்நியாசத்தில் "அந்தக்காலமும் சவுகர்யமும் அப்போதைய அரசாங்கத்தின் யோக்கியதையும் வேறு, இந்தக்காலமும் இப்போதைய அரசாங்கமும் சீர்திருத்தம் செய்யவோ அழிவு வேலை செய்யவோ விருப்பம் கொண்டவர்களுடைய சவுகரியமும் வேறு" என்று சொல்லியிருப்பது தக்க பதிலாகும். இப்போதைய இயக்கம், அடிக்க அடிக்க எழும்பும் பந்துபோலவும் வெட்ட வெட்ட தளிரும் கொடிகள் போலவும் பரவிவிட்டது, கொஞ்சகாலத்திற்கு முன் ஒருவர் எழுதியதுபோல், அதாவது "எங்களுக்கு இச்சுயமரியாதை இயக்கம் கண்களை திறந்துவிட்டது. இனி எவர் தடுத்தாலும், இந்த இராமசாமி நாயக்கரே மாறிவிட்டாலும், இந்த உணர்ச்சியை அடக்கிவிட முடியாது என்று எழுதியதுபோல் இனி என்றென்றைக்கும் இவ்வியக்கமும் இந்த உணர்ச்சியும் மறையாது என்பதை யாரும் அழிக்க முடியாது என்பதையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிவிட்டது.

மற்றப்படி பெண்கள் விடுதலைக்கு தடையான அர்த்தமற்ற கற்பும், சம்மதமற்ற விதவைத்தன்மையும் அழிக்கப்பட வேண்டும் என்றும், அவைகள் அழிக்கப்படத்தக்க முறைகளும், அதாவது புருஷன் என்பவன் "பழையசாதம் சுடுகிறது, விசிறிகொண்டு வீசு" என்றால், உடனே பெண்ஜாதி என்பவள் விசிறிகொண்டு வீசவேண்டியது தான் கற்பு என்றும், பெண்ஜாதி என்பவள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருக்கும் போது புருஷன் என்பவன் கூப்பிட்டால், திடீரென்று சேந்தும் கயிற்றை விட்டு விட்டு ஓடிவர வேண்டுமென்றும், ஓடிவந்தால் மாத்திரம் போதாது கிணற்றில் கயிறும் பாத்திரமும் அந்தரமாய் தொங்கிக்கொண்டிருக்கவேண்டும் என்றும், அப்படி தொங்கிக்கொண்டிருந்தால் தான் கற்பு உள்ளவள், பதிவிரதையானவள் என்றும் சொல்வதான கற்பையும் பதிவிரதா தன்மையையும் அடியோடு ஒழித்தாக வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதும், விதவைகளுக்கு அவர்கள் தாய் தகப்பன் மாரோ அல்லது சுற்றத்தார்களோ மறுகலியாணம் செய்து வைக்காவிட்டால், அவ்விதவைகள் தங்களுக்கு இஷ்டமான கணவரை தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டியது என்றும், புருஷனுடன் வாழும் மற்ற பெண்களும் இதற்கு உதவி செய்து விதவைகளை கணவனுடன் வாழச்செய்ய அனுகூலமாயிருக்கவேண்டும் என்றும் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது. அது மாத்மாமன்றி,

குறுகிய நோக்கங்கொண்டோ அல்லது விஷம புத்திகொண்டோ "பெண்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழுக்க ஈனமாய் நடந்து கொள்ளலாமா" என்று கேட்பவர்களுக்கும் சமாதானமாக, அதாவது "கணவன் மனைவி என்பதாக இருவர் சேர்ந்து இவ் வாழ்க்கை நடத்துவதற்காக செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பலனாகவோ காதலன் காதலி என்கின்ற முறையில் இருவர்களின் காதல் இன்பத்தின் பயனாகவோ இருவரையும் சம நிபந்தனை கொண்ட கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு இருகக்கட்டினாலும் அது எவ்விதத்திலும் பெண்கள் விடுதலைக்கு இடையூறாக இருக்காது" என்று சொல்லியிருப்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

மற்றப்படி, விதவைகள் என்னும் கொடுமை படுத்தப்பட்டவர்கள் விஷயத்திலும் "அவர்கள் தங்கள் துக்க நிவர்த்திக்கு இனி பெற்றோர்களையோ உறவினர்களையோ எதிர்பாராமல் தாங்களாகவே தக்க கணவனை தெரிந்தெடுத்து வெளிப்படுத்திவிட வேண்டியது தான்'' என்று குறிப்பிட்டதும், மற்றப்படி "புருஷனுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண்களும் விதவைகளின் மேற்கண்ட முயற்சிக்கு உதவி செய்ய வேண்டியது'' என்றும் கூறிப்பிட்டிருப்பதுப் குறிப்பிடத்தக்கதே யாகும்.

மற்றப்படி ஜாதி வித்தியாசம், தீண்டாமை, மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை ஒழித்தலைப்பற்றியும் கல்வியைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பவைகளும் ஊன்றி கவனிக்கத்தக்கவைகளாகும்.

மகாநாட்டிலும் அக்கிராசனரின் உபந்நியாசத்திற் கண்டபடியே சில தீர்மானங்களை யானாலும் மிக முக்கியமான தீர்மானங்களாகவே தீர்மானிக்கப்பட்டிருப்பதானது குறிப்பிடத்தக்கது.

அதாவது, பெண்கள் சுதந்திரத்திற்குப்பெரிதும் இப்போது இடையூறாயிருப்பது அவர்களுக்கு சொத்துரிமை இல்லாமையால் தான் என்பதை உணர்ந்து இனிமேல் குடும்பச்சொத்தில் பெண்களுக்கு சம உரிமையும், விதவைகள் விதவைத் தன்மையுடன் இருந்து கொண்டு கஷ்டப்பட வேண்டியதற்கு காரணமாயிருப்பது அவர்களுக்கு புருஷன் இறந்தவுடன் மற்றவர்களிடம் ஜீவனாம்சத்திற்கு தொங்கிக்கொண்டிருக்க வேண்டியிருப்பதால் தான் என்பதை உணர்ந்து அது மாறும்படி புருஷன் சொத்து பாத்தியம் முழுவதும் சர்வ சுதந்திரத்துடன் விதவைகளுக்கு அளிக்கப்பட்டு விடவேண்டும் என்றும் தீர்மானித்திருப்பதானது சரியான பரிகாரமாகும்.

மற்றும் தீண்டாதார்கள் என்பவர்கள் கல்வி இல்லாத காரணத்தால் முன்னேற முடியாமல் இருப்பதால், அவர்களுக்கு சாப்பாடு போட்டு சட்டாயக்கல்வி கொடுக்க வேண்டுமென்று தீர்மா

ளித்திருப்பதும், மூடபழக்க வழக்கங்களை ஒழிப்பதற்காக பள்ளிக் கூடங்களில் குருட்டு பக்தி மூட நம்பிக்கைகளுக்கு இடந்தரும் படியான கல்வி கற்பிக்கக்கூடாது என்றும் மூட நம்பிக்கையும் குருட்டு பக்தியும் உள்ள உபாத்தியாயர்களை பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளை படிப்பிக்க சேர்க்கக்கூடாது என்றும், உபாத்தியாயர் களைத் தயார் செய்யும் பள்ளிக்கூடங்களிலும் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களிலும் மூட நம்பிக்கையும் குருட்டு பக்தியும் உண் டாக்கத்தக்க எந்த புஸ்தகங்களையும் பாட புஸ்தகமாக வைக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதும், மற்றும் சில தீர் மானங்களும், முக்கியமாக மதத்தின் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழக்கத்தை ஒழிக்கச் சட் டம் செய்யவேண்டும் என்று ஸ்ரீமதி டாக்டர் வோகளி ஆர்யா அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமதி அலமேலு மங்கைத்தாயா ரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் குறிப்பிடத்தக்கவை.

எனவே இவ்வளவு முக்கிய தீர்மானங்கள் செய்ததில் மகா நாட்டு பிரதிநிதிகள் காட்டிய ஆரவாரத்திற்கும் ஊக்கத்திற்கும் அளவே இல்லை. மகாநாட்டுக்கு விஜயம் செய்து தீர்மானங்களில் கலந்து கொண்ட பெரியோர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றே சொல்லவேண்டும். அவர்கள் அரசாங்க இலாகா இப் போதய மந்திரிகளும், மாஜி மந்திரிகளும் இனி வரப்போகும் மந் திரிகளும் சட்ட சபை பிரதிநிதிகளும், பல ஸ்தலஸ்தாபனத் தலை வர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும், மத சம்பந்தமான ஆராய்ச்சியுள்ளவர்களும், சீர்திருத்தத்தில் பெரிதும் கவலை கொண் டவர்களும், தக்க கல்வியும் அறிவும் உள்ள பெண்மணிகளும், பண் டிதர்களும், வாலிபர்களும், முதியோர்களும் ஆகிய பல திறப்பட்ட தக்க பிரதிநிதிகளே யாவார்கள். அவர்களில் வெளியூர்களிலிரு ந்தும் அனேகர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் மேற்கண்ட மகாநாட்டை திறப்படவும் சிறப்புடனும் நடத்திய பெருமை மிகுதியும் திரு. சுரேந்திரநாத் ஆரியா அவர்களையும் ராவ்பகதூர் எம். கே. ரெட்டி அவர்களையும் சேர்ந்தது என்றே

சொல்லுவோம். இதுவரை சீர்திருத்த சம்பந்தமாக எத்தனையோ மகாநாடுகள் நடந்திருந்தாலும் இதுபோன்ற பிரதிநிதித்துவமும் பலன் தரத்தக்க தீர்மானங்களும் கொண்ட மகாநாடு மிகச்சுருக்கமாகத்தானிருக்கும்.

நிற்க, தீர்மானங்கள் எவ்வளவோ முன்னேற்றமுடைய தானாலும் அவைகளை நிறைவேற்றி வைப்பதில் அரசாங்க சம்பந்தமான சட்ட உதவிகளும் தேவையாயிருப்பதால், பொதுஜனப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதில் பொது ஜனங்கள் மேற்கண்ட அபிப்பிராயமுடைய கனவான்களையே சட்டசபை லோக்கல் போர்டு முதலிய ஸ்தாபனங்களில் போய் சேரும்படி பார்க்கவேண்டியதே முக்கிய கடமையாகும் என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை.

முற்றுப்பெற்றது.

சென்ட்ரல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ZNL:40
40

## பார்ப்பனரல்லாத நண்பா

நீங்கள் சுயமரியாதை பெற்று விடுதலைய விரும்புகின்றீர்களா? அப்படியானால் வேதப் புரட்டையும் சாஸ்திரப் புரட்டையும் இதிகாசப் புரட்டையும் தைரியமாய் வெளியாக்கி யிருக்கும்

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் | ரூ. | 0—4—0 |
| மநுநீதி மர்மம் | ,, | 0—2—0 |
| இராமாயண ஆபாசம் | ,, | 0—4—0 |

ஆகிய மூன்று புஸ்தகத்தையும் அவசியம் வாங்கிப் படியுங்கள்.

### பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது பார்ப்பனரல்லாதார்களுக்கு பார்ப்பனர்கள் செய்யும் படுமோசங்களை விளக்கிக்காட்டும் நாடகரூபமான ஒரு புத்தகம் விலை ... ரூ. 0 4 0

### தர்ம பரிக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது, "மாறுவேடம் பூண்டு புராண ஆபாசங்களை வெளியாக்கிய இரண்டு வாலிபர்கள்" என்னும தலைப்பின் கீழ் தொடர்ச்சியாக "குடி அரசில்" எழுதப்பட்ட பல வியாசங்களை ஒன்றாகத்திரட்டி அச்சிட்ட புத்தகம் விலை ரூ 0-4-0

திருக்குறள் 1330-குறளுக்கும் மூலமும்
பொழிப்புரையும் அணா 0—8—0

சமய சமூகக்கொடுமைகளை உணர்ந்து, சுயமரியாதை உணர்ச்சி பெற, சமத்துவம் விடுதலை முதலிய கொள்கைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினால்,

**இன்றே குடி அரசுக்கு சந்தாதாரர்களாகச் சேருங்கள்.**

வருட சந்தா ரூபா 3—0—0

மானேஜர் குடி அரசு, ஈரோடு